[illegible]

V 4 No. 10

12 mah 1931

ജL

ണ211, N128KN

N31·4.N.

L88908

636

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ஞ மார்ச்சு மீ 12 உ [No. 10

8 JUL 1931

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)	181
2.	பிஸாரோ நாடகம் - (அங்கம்-1 களம்-1) R. B. Sheridan	183
3.	சூளாமணி (உரையுடன்) குமாரகாலச் சருக்கம் (16—25)	185
4.	தனிப்பாடல்—நாமகள் குயிற்பத்து. க. சோமசுந்தரம் பிள்ளை	187
5.	யாப்பிலக்கணம்—(தளை)	188
6.	அப்பர் (64-கலை-வாக்கு ஸ்தம்பனம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L.	190
7.	மானத சாத்திரம் (நிலைப்புலன்.) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L.	192
8.	கம்ப ராமாயணம் (கைகேசி சூழ்வினைப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L.	193
9.	வர்த்தமானம்	199

க லா நி ல ய ம்

188908

வாழ்வாங்கு வாழ்பவர். 8.

மகிழ்ச்சியுள் இகழ்ச்சியும் உவகையால் அவலமும் அடுத்தடுத்துப் பயில்வதால் அவையிரண்டும் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய வாழ்க்கைக்கு ஆதாரமாக இயலாத உண்மை எதிர்வந்து நிற்கின்றது. இன்பம் என்னும் கருத்து, மகிழ்வு உவகை என்பவைகளினின்று ஒருவகையில் வேறாயதெனினும், சிற்சில போது அவைகளோடு மயங்கிப் பயில்வதால் அவையிரண்டும் வாழ்க்கையின் முழுமைக்கு உதவாமல் நிற்றலை முதலிற் காட்டினோம். அறம் பொருளின்பம் என்னுந் தொடரில் அமைந்துள்ள 'இன்பம்' என்பது, உவகை மகிழ்ச்சி என்பவைகளினின்று வேறானதென நினைக்க இடமுளது. தன்னைப்பற்றி நிகழ்கின்ற மகிழ்வையும், பொருளைப்பற்றி எழுகின்ற உவகையையும்போ லல்லாது, இன்பமானது, தன்னையும் அயர்ந்து பொருளையும் இகந்து எஞ்சியவோர் பிற்றை நிலையின் பயன் என்னலாம். இன்பநிலையில் இருக்கின்ற வொருவன், தான் ஒரு பொருளைப் பெய்து கொள்ளவாவது எய்திநிற்கவாவது முயல்வானல்லன். "ஈத்துவக்குமின்ப மறியார்கொல் தாமுடைமை வைத்திழக்கும் வன்கணவர்," என்று நாயனார் நவின்ற போது, வருந்திவந்தோர் அரும்பசி களைந்து அவர் திருந்து முகங்காணும் உவகையையும் உட்கொண்டாராயினும், அவ்வுவகைக்கும் அப்பாலாய இன்பம் என்பதொன்றை எண்ணி யிது பேசினார் என்பதற்கையமில்லை. உவகை என்பதை வேறு பலவகைகளில் எய்தலாம் ஆயினும், அவ்வுவகையின் இன்பம் பயத்தற்குரிய செவ்வி ஈகையினாற்றானே கைவருதற் கியலும் எனக் கருதினார்போல், "இரப்பாரை யில்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம் மரப்பாவை சென்றுவந் தற்று" எனப் பின்னர்ச் சாற்றினார். வேறுசில குறள்களில் 'இன்பம்' என்பதைச் சுகம் என்னும் பொருளோடு ஒக்கத் திருவள்ளுவர் வழங்கியிருக்கின்றாரெனினும், உடலுறு போகங்களை ஒழித்து இவைகளுக்கு அயலாய் மனத்துள் நேர்கின்ற வோர் நிலையையே இன்பத்துள் அடக்குகின்ற அவர் கொள்கையும் சில குறள்களினின்று தெரியவரும். "இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு" என்றும், "அவாவென்னுந் துன்பத்துள் துன்பம் கெடின் இன்பம் இடையறாது ஈண்டும்" என்றும் "இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னுந் துன்பத்துள் துன்பங் கெடின்" என்றும் அவர் நிகழ்த்துங்கால், இருள் துன்பம் இகல் அனையவைகள் இல்லாமையே இன்பம் என்னும்படி அவ்வின்பத்தின் இலக்கணம் எதிர்மறை வாய்ப்பாட்டால் உரைக்கிடக்கின்றது. ஆயினும், துன்பமில்லாமை இன்பமெனவைத்து, அவ்வின்பத்தையும் விழைவது துன்பம் என வள்ளுவநாயனார், "இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள் துன்பம் உறுதல் இலன்" ஆகுமாறு

அறிவுறுத்துகின்றர். "இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான் துன்பம்உறுதல் இலன்" என இடுக்கணழியாமை என்னும் அவ்வதிகாரத்திலேயே மீண்டும் வற்புறுத்துகின்றனர். ஆதலின், துன்பமற்ற நிலையே இன்பமெனக்கொள்ளினும் அவ்வின்பமும் விழையற்பாலதன்றென மறுக்கின்றார். அதுவுமன்றி, இன்னாமையையே இன்பமெனக்கொள்வது சிறப்புடைத்து எனக் கூறும் அடுத்த குறள். இவைகளுக்கு எதிருறக் குறிக்கும் குறள்களும் சில உள. "துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி யின்பம் பயக்கும் வினை" என்றும், "அறன் ஈனும் இன்பமும்ஈனும்திறனறிந்து தீதின்றி வந்த பொருள்' என்றும் உரைக்குமிடத்து அவ்வின்பம் விழைவதற் குரியதென்னுங் கொள்கையால் ஊக்கம் ஊட்டும் கருத்தினைக் காணலாம். அதிகாரத்தின் குறிப்பிற்கிணங்க வெவ்வேறு குறள்களில் இன்பம் என்பதற்கு வெவ்வேறு பொருள் கொள்ள வேண்டுமென ஒருவாறு இயம்பலாமாயினும்முனைந்து நோக்குங்கால் இன்பம் என்னும் இது திருக்குறள் நூலினுள் ஒரு வழிப்படாது ஊசலாடுகின்றது என்றே நாம் கருதவேண்டி யிருக்கின்றது. இன்பம் இன்னதென்று தேரமாட்டாமையே இதற்குக் காரணம். துன்பமற்ற நிலைதான் இன்பமாகும் எனச் சொல்வதன்முன், இன்பமில்லாமையே துன்பமென எண்ணலாகாதோ வென்னும் ஐயம் பிறக்கின்றது. இதுவுமன்றி, "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்று அவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு" என உரைக்கும்போது, உடல்கொண்டு துய்க்கவல்ல ஒன்றுபோல் இன்பம் தோன்றுகின்றது. 'அறத்தால் வருவதே இன்பம்' என வற்புறுத்துகின்ற வாசகத்தில், துன்பம் நீங்குவதோடு நில்லாமல் வேறு வந்து சேர்வதற்குரிய இன்பம் என்னும் ஒன்று உளதென்னுங் கருத்து அடங்கியிருக்கின்றதென நினைத்தல் வேண்டும்.

இப்படிப் பலவாகி வழங்கலாவதினின்று, நெருங்க நெருங்கக் கைகழன்றகலும் கானல்நீர் அன்னதாய்த் தோற்றுமோர் செய்தியே இன்பமெனலாவது ஒருவாறு புலப்படும். இல்லறஇன்பம் என்னு மதனைச் சிறிது ஆராய்வோம். மனைவிமக்கள் நல்லவர்களாய், வறுமையும் நோயுமின்றிவாழ்கின்றவொருவன், இன்ப வாழ்க்கை யெய்திய செல்வியன் எனக் குறிக்கப்படுதற் குரியவனாகின்றான். பார்ப்போர் கண்களுக்குப் புலப்படக்கூடிய அல்லலொன்றும் அவன்நாட்களைக் கலைக்காமல் இருக்கலாம். நகுகின்ற முகத்தோடு அவனும் அவன் மனையுளோரும் நடமாடலாம். ஆயினும் என்! இவனுக்குந்தான் குறையொன்றுமில்லை என்றெண்ண வொண்ணுமோ. அவாக்கள் புகுந்து அலைக்காத காலத்தும், அவ்வியமுடைய சில அயலார் இவனுக்கு இடுக்கண்கள் இழைக்காத காலத்தும், இன்பமெனும் அந்நிலையினூடு ஒரு கவற்சியும் கலந்திருக்கும் தன்மை தெரியவரும். அன்புடைய தன் மாமன் வந்திறங்கிய களிப்பினால் ஒரு ஐந்தாண்டுச் சிறுபிள்ளை, அவன் வாயிற்படிதாண்டி உட்புறமும் அடையா முன்னம், "மாமா, நீ என்றைக்குத் திரும்பிப்போவாய்" எனப் பரிவுடன் வினவுவதைக் கேட்டிருப்பார் பலர். மாமனை வெறுத்து "நீ எப்பொழுது தொலைவாய்" என்ற பான்மையில் எழுந்த வினா [illegible] மாமன் வருகையோடு தனக்குவ[illegible] யவோர் உணர்வின் சூழ்ச்சியையே அது காட்டுகின்றது. தன்னுடைய இன்பத்திற்கு ஏதுவாய அம்மாமன் என்று சென்று கழிவானோ என்னும் அச்சம் உள்ளத்துட் புகுந்து உழக்குகின்றது என்பதற்கே, வருமுன் போகும்நாள் கேட்கும் இப்பிள்ளைவினா அடையாளம்.

தத்தம் வயதிற்கேற்றவாறு இன்பத்தினளவில் எல்லாரும் பிள்ளைகளே. இருக்கும் ஒரு இன்பநிலை அகலும்நாள் என்று வந்தெய்துமோவெனும் அச்சத்தினின்று தப்புவ தருமை. "தனமாதர் அம்சொற் சுதலைப்புதல்வர் தரணி இல்லம் தனம், ஆதரம்செய்யும் வாழ்வு அஞ்சினேன்" எனப் பிள்ளைபெருமாள் ஐயங்கார் முறையிட்டுக் கதறுகின்றார். வேறெதனைக் கடந்தாலும் இந்தஅச்சத்தினின்று கடத்தல் அருமை. அவ்வச்சம் இருக்கும்வரையில் இன்பம் என்பதெல்லாம் வீண்வார்த்தை எனலாகின்றது. வாழ்க்கையில் முழுமை இல்லை எனின், வாழ்வாங்கு வாழ்வது எங்ஙனம் அமையும்.

'அறத்தால் வருவதே இன்பம்,' என்றும், 'அறனும் இன்பமும் ஈனும்—பொருள்' என்றும் உரைத்திருக்குமாற்றால், இவ்வாழ்க்கையில் வேண்டப்படுவது இன்பம் எனவும், அவ்வின்பத்தை எய்துவிக்குஞ் சாதனங்கள் அறமும் பொருளும் எனவும் திருவள்ளுவர் வகுத்திருக்கின்றார்போல் தோன்றுகின்றது. ஆயினும், இன்பத்தோடு அதன் இனத்தைச் சேர்ந்த மகிழ்ச்சி உவகைகளும், அஞ்சி வருந்தி இகழ்வதற் காதாரமாய் நிற்கக் காண்கின்றோம். ஆதலின், அறம்பொருளின்பம் என்னுமம் மூன்றும் நிலைத்தகாலத்தும் வாழ்க்கை குறைவற்றுமுற்றியவோர் பெற்றிபைக்காண்கிலம். எனின், வாழ்வு முழுமையடைவதற்கு ஏதுவாயது வேறொன்றிருத்தல்வேண்டும். அதுதான் யாது?

இதற்கு, கவிவரர் இரவீந்திரநாதர் அனைய மேன்மையோர், 'ஆன்ம வாழ்க்கை' என விடைபகர்வர். இவ்வான்மவாழ்க்கை எவ்வகைத்து என அவ்வறிஞர் நன்கு வகுத்திருப்பதை முன் (வால் 1, இதழ்கள் 27 முதல் 33 வரை) இவ்விதழ்களில் விளக்கியிருக்கின்றோ மாதலின் மீண்டும் அதனை இங்குவரைதல் மிகை. அவ் வான்மஉணர்வு கைவரப் பெறுதற்குத் தனிப்பரம்பொருளாம் ஒரு கடவுளின் அருள் இன்றியமையாததென்பதொன்றைமட்டுமே நாமிங்குச் சேர்த்துங்கொண்டாற் போதும். திருவெல்லாம் இருந்தேனும் அவ்வருள் ஒன்று இல்லையாயின் வாழ்வாங்கு எவரும் வாழ்ந்தவராகமாட்டார். இனியேது எமக்கு உன்னருள் வருமோ எனக் கருதி ஏங்கி ஏங்கி அக்கருணைப் பிரவாக அருளைத்தாகமாய் நாடி நிற்பதுதான் நல்வாழ்க்கையின் நிலை. அருள்வருமோ எனக்கருதி ஏங்கலாம், இன்பம்போல் வந்த அருள் போகுமோ என்னும் அச்சம் அதன்கண் இல்லை. இறைவனது அருளை எவர் நாடி நிற்கின்றனரோ அவரே வாழ்வாங்கு வாழ்பவர். நா முன்னேரிடத்தில் உரைத்தபடி, பொருளுள்ளார்க்கு அவ்வுலகம் இல்லை, அருளில்லார்க்கு இவ்வுலகமும் இல்லை என்பது திண்ணம். அவ்வருளின்பால் மனத்தைத் தூண்டி நாடுவிக்குங் கருவி கலைகளிற் சிறந்தது வேறொன் றிலது. எல்லாப்படியாலும் நம்மனோர்க்குக் கலைகளே கதி.

பிஸாரோ

(Copy-right with Messrs. C. Coomaraswamy Naidu & Sons.)

ரிச்சர்ட் பிரின்ஸ்லே ஷெரிடன் எழுதிய வோர் ஆங்கில நாடகத்தின் மொழி பெயர்ப்பு

[166-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம்—1. களம்—1.

பிஸாரோ:—இந்தச் செருக்குச் சிறிது குறைந்திருக்குமாயின் ஒருவேளை உன் உயிரை நீ காத்திருக்கலாம.

ஒரோஸிம்போ:—எனது உயிர் உலர்ந்ததோர் மரம். அதைக் காப்பாற்றி என் செய!

பிஸாரோ :—கிழவா, கேள். இப்பொழுது யாம் பெருவியரைப் போருழக்க எழுகின்றோம். கற்கள் நடுவே இருக்கும் அவர்கள் கோட்டைக்குட் செல்ல அந்தரங்கச் சுரங்கமொன் றிருக்கின்றதாமே, அதை மாத்திரம் காட்டிக்கொடுத்துவிடு; பிறகு உனக்கென்ன வேண்டுமோ கேள். வரையற்ற பொருள்மீது உனதாசை—

ஒரோஸிம்போ:—ஹா! ஹா! ஹா! ஹா!

பிஸாரோ:—எனது நற்கொடையையும் இகழ்கின்றனையோ?

ஒரோஸிம்போ:—உன்னையும் உனது நற்கொடையையும் ஒன்றுப் சேர்த்து!....செல்வமா? தீரவீர புத்திரசெல்வங்கள் இரண்டுண்டு எனக்கு. இவ்வுலகில் நல்லன செய்துவைத்த புண்ணியமாம் நிதிக்குவைகள் வேண்டியபது நான் மோட்சத்தில் சேர்த்து வைத்திருக்கின்றேன்—மேலும் எனது ஒப்பற்ற கருவூலமும் இறையும் அகலாது என்னிடமே இருக்கின்றது.

பிஸாரோ:—அதுவென்ன? எனக்குச் சொல்.

ஒரோஸிம்போ:—ஆஹா, சொல்கின்றேன். ஏனெனில் நீ அதை ஒருபோதும் களவாடிக் கொள்ள முடியாது—களங்கமற்ற என் மனச்சாக்ஷியே யக் கருவூலம்.

[ஒரோஸிம்போவைக் கவனித்து நோக்கிய வண்ணமாய் எல்விரா உட்காருகின்றாள்]

பிஸாரோ —உன்னைப்போல் பேசத்துணியும் பெருவியன் நீயன்றி இன்னொருவன் இரானென்று எண்ணுகின்றேன்.

ஒரோஸிம்போ:—ஐயோ! அவ்விதமே, நீ செய்வதுபோல் செய்யத்துணியும் பாதகன் உங்களுள் இன்னொருவன் இல்லையென்று நான் எண்ண இடமிருக்கலாகாதா?

கோமேஸ்:—மூர்க்க அஞ்ஞானியே! உங்கள் சைனியத்தில் எத்தனைபேர் இருக்கின்றார்?

ஒரோஸிம்போ:—அதோ அக் காட்டிலுள்ள இலைகளை எண்ணிப்பார்.

அல்மாக்ரோ:—உங்கள் கோட்டையின் பலமற்ற பாகம் எது?

ஒரோஸிம்போ:—பலமற்ற இடமே இல்லை. ஒவ்வொரு பாகத்தையும் தர்மநியாயமாகிய கொத்தளங்கள் காக்கின்றன.

பிஸாரோ:-உங்கள் மனைவிமக்களை எங்கே ஒளித்து வைத்திருக்கின்றீர்கள்?

ஒரோஸிம்போ:—அவரவர் கணவன் தகப்பன்மார் இருதயங்களில்.

பிஸாரோ:-அலான்ஸோவைத் தெரியுமோ உனக்கு?

ஒரோஸிம்போ:-தெரியுமோவா? அலான்ஸோவையா? அம் மகானையா! எங்கள் பேருபகாரியை! 'பெரு'வைக் காக்கவந்த எங்கள் ஒரு தெய்வத்தை!

பிஸாரோ :—இவ்வளவு புகழ் அவன் பெற்றது எதற்காக?

ஒரோஸிம்போ:—உன்னைப்போல் இராததற்காக.

அல்மாக்ரோ :—அலான்ஸோவினுடன் சேர்ந்து படைநடத்துகின்றானே அந்த ரோலா யார்?

ஒரோஸிம்போ:—அதற்குப் பதில் விளம்புவேன். ஏனெனில் அவ்வீரனது திருநாமத்தைக் கேட்பதையும்சொல்வதையும்விட யான்மகிழத்தக்கது வேறொன்றில்லை. ரோலா எங்கள் இறைவனது உறவினன். படைஞரடங்கலும் அருமையுடன் பாராட்டும் பெருமான். பொருதாற் புலி; அல்லாக்கால் பசுவினும் மிகுந்த சாந்தமானவன். அவன் கோராவை மணம் புரிந்துகொள்வதென நிச்சயம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் அவளுக்கு அலான்ஸோவின்பால் காதல் உதிக்கலாவதைக் கண்டு—நட்பின்பொருட்டும், கோராவின் நன்மையைக் கோரியும்—தனதுரிமையையும்—அதனுடன் தன் மன அமைதியையும் — தியாகம் செய்துவிட்டான். ஆயின் இன்னுமவள்மீது அவனுக்குக் களங்கமற்ற விசுவாசமுளது.

பிஸாரோ:—என்ன ஆச்சரியமான காட்டுமிராண்டியிவன். இந்த ரோலாவை யான் வெகு விரைவிற் காண்பேன்!

ஒரோஸிம்போ:—பார்க்காதிருப்பதே நலம். அவன் கண்களினின்று முருகியெழும் கோபத்தீ உன்னைச் சாம்பலாக்கிவிடும்.

தவில்லா:—மூடு வாயை. இல்லையெனில் நடுங்கு.

ஒரோஸிம்போ:—மீசைமுளையாக் கொள்ளைக்காரா! நான் இதுவரையிற் கடவுள்முன் கூட நடுங்கினதில்லையே; மனிதனொருவன்முன் நடுங்கவா? அதுவும் மனிதனிலும் இழிந்தழிந்த உன் முன்னேயா?

தவில்லா:—இன்னொரு வார்த்தை—தருக்கு மிக்க அஞ்ஞானிப் பிண்டமே—குத்திவிடுவேன்.

ஒரோஸிம்போ :—குத்து, குத்து; ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவ திலகமே, குத்திவிடு. பிறகு உங்களூர் சென்று, 'நானும் பெருவியனொருவனைக் கொன்றுவிட்டேன்' என்று பெருமை பாராட்டிக் கொள்ளலாம்.

தவில்லா:—நரகமே! இப்பழி தீராது விடேன்.

[அவனைக் குத்துகின்றான்]

பிஸாரோ:—நில்! நில்!

தவில்லா:—இவன் வசைகளை இன்னுங்கூட உன்னாற் பொறுத்திருக்க முடியுமோ?

பிஸாரோ :—ஆகையாற்றான் அவனைச் சித்திரவதை செய்யாம லனுப்பிவிட்டனையோ?

ஒரோஸிம்போ:—உண்மையே! நீயே பார், வாலிபனே. (தவில்லாவைப் பார்த்து) நினது யோசனையற்ற மூர்க்கமே என்னைக் கழுமரத்தினின்றும் தப்புவித்தது; ஆயினும் அதனால் ஒரு திவ்விய உண்மையை நீ அறிந்துகொள்வதற் கேற்ற அமையம் இழந்தனை. துஷ்டர்கள் எவ்வளவு அக்கிரமக் கொடுமைகளைச் செய்தபோதிலும் சாதுக்கள் அவ்வளவிற் கவ்வளவு பொறுமையுடன் அவைகளைப் பொறுத்திருப்பார்களென்ப தனக்குத் தெரியவந்திருக்குமே.

எல்விரா:— (ஒரோஸிம்போவின் தலையைத் தன் மார்புமேற் சார்த்தி) சீ! நீங்களெல்லாம் இரக்கமற்ற அரக்கர்கள்!—தலைநிமிர்ந்து என்னைப் பார்; பிராணத்யாகம் செய்த நிரபராதியே, இன்னுமொருதரம் பார். உயிர் நீங்குமுன் என்னை நீ யாசீர்வதித்துச் செல்லலாகாதா? தெய்வமே! என்மனம் சகிக்க வில்லையே.

ஒரோஸிம்போ:—என்னைக் கண்டும் மனமுருகுகின்றதா வுனக்கு! என்னையும் கண்டா? ஆயின் எனக்குச் சுவர்க்கம் இருவிரற்கிடைதான். வாழ்த்தவா வேண்டுமுன்னை யம்மா?—ஸ்பானியர்களே — கடவுள் உங்கள் இருதயத்தை மாற்றி — நானுங்களை மன்னிப்பதுபோலவே — மன்னித்து விடட்டும்.

பிஸாரோ:—சே, போ!

[ஒரோஸிம்போவைத் தூக்கிச் செல்கின்றார்கள்.]

சே, போ! தவில்லா! இன்னு மொருதரம் நீ இவ்விதம் பதறி யொன்று செய்வாயாயின்—

தவில்லா:—விரைந்துவந்த வெஞ்சினத்தால்...... செய்த இக் குற்றத்தை மன்னித்தருளவேண்டும்.

பிஸாரோ—போதும்! அந்தப் பாவியை அவிழ்த்துவிட்டுவிடுங்கள் — அவன் போகட்டும். இத்தனை இகழ்ந்து நம்மை அவன் ஏசியிருந்தபோதிலும் எத்தனை இரக்கம் நாமவனுக்குக் காட்டியிருக்கின்றோம் என்பதை அவர்களிடம் போய்ச் சொல்வதே நலம்—கேளுங்கள், நமது படைகள் புறப்பட்டுவிட்டன.

சேவகன்:—(எல்விராவைக் கடந்து போகும்போது.) தங்கள் உதவியால் என் தலைவனது சவத்தையாகிலும் நிந்தனைக்குட்படுத்தாமற் காப்பாற்ற முடியுமானால்—

எல்விரா—நீ சொல்வது தெரிகின்றது.

சேவகன்:—அவரது மக்கள், தம் தந்தைக்கிழைத்த தீங்கிற்குப் பழிவாங்காது விட்டால், உங்கள் தர்மகுணத்திற்காவது எப்பொழுதும் நன்றியுள்ளவர்களா யிருப்பார்கள்.

பிஸாரோ—அவ்வடிமை யாது பிதற்றுகின்றான்?

எல்விரா:—நீங்கள் காட்டின இரக்கத்திற்காக வந்தனம் இயம்பிவிட்டுப் போகிறான்.

[காவலாளர்களும் வழிகாட்டிகளும் வருகிறார்கள். சைனியம் இவர்கட் கெதிரில் செல்கின்றது]

பிஸாரோ:—என்னுடன் வாருங்கள், நண்பர்காள்—ஒவ்வொருவருக்கும் அவரவர் வேலையைச் சொல்லிவிடுகின்றேன். பெருவியர் தம்தேவதைக்குப் பலியிட்டு மீள்வதற்குள்ளேயே — நமது வெற்றிக்கொடியை அவர்கள் இரத்தத்திற் றோய்த்துத் தலைநகர்க் கோபுரளங்களில் நாட்டிவிடுவோம்.

[எல்விராவும் வல்வெர்தேயும் தவிர எல்லாரும் போகின்றார்கள்]

வல்வேர்தே:—எல்விராவின் ஆவியை நடுங்கச்செய்யும் இவ்விதக் கொடுமைகள் அதிகரிக்க அதிரிக்க எனது எண்ணமும் நிறைவேறுமென்கின்ற நம்பிக்கையை யான் பலப்படுத்திக்கொள்ளத் துணிவது இயற்கை தானே.

எல்விரா:—பயத்தினாலும் கோபத்தினாலும் நானிப்பொழுது உணர்வழிந்து கிடக்கின்றேன். ஐயோ! இக் கொடுமைகளைக் காணாது நான் ஓடலாகாதா!

வல்வேர்தே:—ஏன், வல்வெர்தேயின் உண்மை நேசம் உனக்கு யாருப் புகலிடமா யிருக்கலாமே?

எல்விரா:—என்னை மீட்டவாவது, எனது பழியைத் தீர்ப்பதற்காவது நீ என்ன செய்வாய்?

வல்வேர்தே:—உனக்கிழைத்த நிந்தனைக்குத் தக்க தண்டனையாக நீ வேண்டுவது எதுவெனினும் அதனை நான் செய்யத் துணிந்திருக்கிறேன் - ஒரே வார்த்தை-இரத்தம் பெருக உன்காலிற் சாய்கின்றான் பார்.

எல்விரா:—இன்னொருவேளை இதைபற்றிப் பேசுவோம். இப்பொழு தென்னைவிட்டுப் போ.

[வல்வெர்தே போகின்றான்]

கூடாது! கூடாது!! இப்படிப் பழிவாங்கலாகாது. அதுவும் இவனல்லன் கருவி அதற்கு. சீ! சீ! எல்விரா நீயா ஒரு நிமிடமாகிலும் இக் கடையாய துரோகியுடன் கலந்தொரு கருமம் புரிவது! நம்பிய தன் தலைவனை மோசம்செய்யும் இப் பாதகன் என்மே லாசையென்று வைத்த சத்தியத்திற்கும், உண்மைக் கவுரவத்திற்குமா கட்டுப்பட்டிருப்பான்? பிஸாரோ என்னைக் கைவிட்டுவிடுவான்-ஆம்! அவனை நம்பி எத்தனை எத்தனையோ—ஐயோ, தெய்வமே—அவனுக்காக நான் எதைத்தான் மனதாரத் துறக்கவில்லை. இருக்கட்டும். என் இதயத்தில் கொதித்தெழும் பெருஞ் சினத்தைச் சிறிதடக்கி அவனை இன்னும் சோதித்துப் பார்ப்பேன். ஓ, புருஷர்களே! உத்தம கன்னிகைகள் உங்கள்மேல் வைத்த வொரு கரையிலாக் காதலில் மிகவிரைவிற் சலிப்படைந்து, உல்லாசச் சரசிகள் கண்களினின்று நூதன வின்பம் அருந்த முயல்கின்றீர்கள்; மனோ வாக்குக் காயங்களால் காதல் காட்டிக் கவர்ந்த எங்கள் உள்ளத்தை யுடைத்துவிட்டு—சுடுகின்ற நெஞ்சத்தையும் அணைத்துவிட்டால் பிறகு வேறெதற்கு அஞ்சவேண்டுமென்று நிர்ப்பயமாயு மிருக்கின்றீர்க ளன்றோ! ஏனெனில் அப்படிப்பட்ட இருதயங்களுக்கு—நீங்கள் என்னதான் நிந்தித்துத் திரஸ்கரித்தாலும்—மாசற்ற கீர்த்தியும் பழியற்ற மனச்சாட்சியுமாகிய கவுரவப் புகலிடங்களுளவன்றோ? ஆயினும், கற்பென்னும் கோட்டையினின்றும் எங்களை மோசவார்த்தைகளால் வெளியிழுத்துவந்து பிறகு கைசோர விட்டகலும் பாதகக் காமுகர்களே, வேறுவிதத் தேறுதலற்ற என்னைப் போன்ற மாதர்களும் உளர் என்பதை மறவாதீர். வேறென்ன இருக்கின்றது. எனது பழிவாங்கும்ஸாஹஸத்தைப் பார்!

[போகிறாள்.]

முதலங்கம் முற்றிற்று.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[167-வது பக்கத் தொடர்ச்சி]

3. குமார காலச் சருக்கம்.

84. மற்றொர்நா ளமரிகைக் கொடிகொண் மாமணிச்
சுற்றுவான் சுடரொளி தழுவிச் சூழ்மலர்
முற்றிவண் டினம்விடா முடிகொள் சென்னியக்
கொற்றவ னிளையவர் குழைய வைகினன். 16.

மற்று - குமரர்கள் இவ்வாறு வளர்வாராக,—ஓர் நாள் - ஒரு நாள், அமரிகை - அமரிகை என்னும் ஆற்றின்கண், கொடிகொள் - கொடியாகப் படர்ந்து விளைகின்ற, மா - சிறந்த, மணி - இரத்தினங்கள் பதித்திருப்பதனால், சுற்று - சுற்றிலும், வான்-சிறந்த, சுடர்ஒளி - வீசுகின்ற ஒளியை, தழுவி - சேர்ந்து, சூழ் - சூழ்ந்திருக்கின்ற, மலர் - மலர்கள், முற்றி - நிறைந்து, வண்டு இனம் - வண்டின் கூட்டங்கள், விடா - நீங்காத, முடிகொள் - கிரீடத்தைத்தரித்த, சென்னி - தலையையுடைய, அ - அந்த, கொற்றவன்-பயாபதிவேந்தன், இளையவர் - மாதர்கள், குழைய - அன்பினால் இளகும்படி, வைகினன் - பள்ளியில் அமர்ந்தவனாயினான்.

மற்று - வினைமாற்றின்கண் வந்ததோர் இடைச்சொல். அமரிகை, என்பது ஓர் ஆறு. அவ்வாற்றில் மணிகள் அதிகம் அகப்படும்போலும். இரத்தினங்கள் பதிக்கப்பெற்று மலர்மாலை சூழ்ந்து வண்டுகள் மொய்க்கின்ற கிரீடத்தை யணிந்த மன்னவன் ஒரு நாள், தன் காதல்மாதரோடு பள்ளியமர்ந்திருந்தனன், என்பது இச்செய்யுளின் பொருள். இளமைப்பருவமுடையவர் இளையவர் என்றும், நலம் உடையவர் நல்லார் என்றும் ஆவது இருபாலர்க்கும் பொருந்துமெனினும் காரணஇடுகுறியாக அச்சொற்கள் மாதர்க்கே சிறப்பாக வழங்கலாகின்றன.

---

85. மஞ்சுடை மணிநகு மாலை மண்டபத்
தஞ்சுட ரகிற்புகை யளைந்து தேனளாய்ப்
பஞ்சுடை யமளிமேற் பள்ளி யேற்பவன்
செஞ்சுட ரிரிவதோர் திறத்த னாயினான். 17.

மஞ்சுஉடை - அழகு உடைய, மணி - இரத்தினங்கள், நகு - விளங்குகின்ற, மாலை - மாலைகளையுடைய, மண்டபத்து - பள்ளிமண்டபத்தின்கண், அம் - அழகிய, சுடர் - சுடரோடு எழுகின்ற. அகில்புகை - அகிற்புகையுடன் கலந்து, தேன் அளாய் - (பூமாலைகளிலிருந்து சொரியும்) தேன் பொருந்தி, பஞ்சு உடை - பஞ்சினை உடைய, அமளிமேல் - படுக்கையில், பள்ளி ஏற்பவன் - பள்ளிகொண்டிருந்த அரசன், செம்சுடர் - சிவந்த கிரணங்களையுடைய சூரியன், இரிவது ஓர் - தோற்று ஓடுவதற்குரிய ஒரு, திறத்தன்-தன்மையுடையவன், ஆயினான் - ஆனான்.

பரிதியும் எதிர்நிற்க மாட்டாமல் இரிந்தோடும் பொலிவையுடைய பயாபதி மன்னன், மண்டபத்து அமளிமேல் பள்ளியேற்பவன் ஆயினான், என்று பொருள் கூட்டிக்கொள்க. மஞ்சு - அழகு, மேகம். மஞ்சு உடை மணிநகு மாலை மண்டபம்—என்பதற்கு, மேகமண்டலத்தைஉடைக்கும்படி அவ்வளவு உயர்ந்தும், இரத்தினங்கள் விளங்குவதும், மலர்மாலைகள் அணியப்பெற்றதும் ஆகிய மண்டபம், என்றும் பொருள்கூறலாம்.

கதிரவன் திரிந்துதிரிந்து தன் ஒளியைப் பரப்ப வேண்டியவனாயிருக்க இம்மன்னவன் ஓரிடத்திருந்து உறங்கும்போதும் தன் ஒளியால் உலகத்தைக் காக்கின்றானதலால் சூரியன் தோற்றனன்.

---

86. மன்னவன் றுயில்விடுத் தருள மைந்தர்பொற்
றுன்னிய வுடையினர் துதைந்த கச்சையர்
பின்னிய ஞாணினர் பிடித்த வில்லின
ரன்னவ ரடிமுதற் காவ னண்ணினார். 18.

மன்னவன் - (அவ்வாறு பள்ளியில் வைகிய) அரசன், துயில் விடுத்து அருள - நித்திரை தெளிந்தவனாகவும், பொன் துன்னிய உடையினர் - பொன்மயமானஆடையை அணிந்தவரும், துதைந்த கச்சையர்-இறுகிய கச்சுக்களை இடுப்பில் கட்டியிருப்பவர்களும், பின்னிய ஞாணினர் - முறுக்கிய அரைஞாண் கட்டியிருப்பவர்களும், பிடித்த வில்லினர் - ஏந்திய வில்லையுடையவர்களும், அன்னவர் மைந்தர் - ஆகிய வீரர், அடி முதல் - அரசனது பாதங்களின் அருகு நின்று, காவல் நண்ணினார் - காவல் செய்யும்பொருட்டு வந்து சேர்ந்தனர்.

அரசன் கண்விழிக்குமளவில் காவற்சேவகர் வந்து சேர்ந்தனர், என்பது இச் செய்யுளின் பொருள். பொன் + துன்னிய, என்பது பொன்றுன்னிய, என்று புணரவேண்டியிருக்க, பொற்றுன்னிய என்று இச் செய்யுளின்கண் புணர்ந்திருக்கின்றது. பொன்றுன்னிய, என இருத்தல் வேண்டும். நாண்—ஞாண், முதற்போலி. அடிமுதல், என்பதிலுள்ள 'முதல்,' ஏழாம் வேற்றுமை உருபு.

---

87. தங்கிய தவழொளி தடாவி வில்லிட
மங்கல வுழைக்கல மருங்கு சேர்ந்தன
வங்கவன் கண்கழூஉ வருளிச் செய்தனன்
பங்கய முகத்தர்பல் லாண்டு கூறினார். 19.

மங்கலம் - மங்கலப் பொருள்களையுடைய, உழைக்கலம் - பாத்திரங்கள், தங்கிய - தம்பால் தங்கியிருப்பதாயினும், தவழ் - தவழ்ந்து பரவுகின்ற, ஒளி - காந்தியானது, தடாவி - பரவி, வில்இட - பிரகாசித்துக்கொண்டு, மருங்கு - அரசனுக்கு அருகு, சேர்ந்தன - கொண்டுவரலாயின. (அங்கு - அசை), அவன் - அரசன், கண் கழூஉ அருளிச்செய்தனன் - தன் கண்களைக் கழுவிக்கொண்டனன். (அப்போது) பங்கயமுகத்தர் - தாமரைபோன்ற முகத்தையுடைய மாதர், பல் ஆண்டு கூறினார் - வாழ்த்துப்பாடல்களைப் பாடினார்.

தவழ்ந்து பரவுகின்ற எதுவும் தான் இருந்த விடத்தை விட்டு நீங்கவேண்டியது அவசியமாயிருக்க, ஒளிமாத்திரம், அது திகழும் பொருளைவிட்டுப் பிரியாது தங்கியிருந்துகொண்டே எங்கும் தவழ்வதும்

ஆகின்ற தென்னும் விந்தைதோன்ற, மங்கல உழைக் கலம் தங்கிய தவழொளி தடாவி வில்லிட மருங்கு சேர்ந்தன - என்றார் கவி. உழைக்கலம் - பாத்திரங் கள்; கண்ணாடி விளக்கு இரத்தினம் முதலிய மங் கலப் பொருள்கள் கொண்டுவரப் பெற்றவை. துயில் விழித்தவுடன் இவைகளைக் காண்பதால் மங்கல முண் டாகும் என்பது மரபு.

கழுவு, என்பது கழூ என மருவிப்பின் கழூஉ என அளபெடுத்ததால் இது சொல்லிசை அளபெடை. கழூஉச்செய்தனன் - கழுவினான்.

---

88. அந்தண ராசிடை கூறி யாய்மலர்ப்
பைந்துணர் நெடிமுடி பயில வேற்றினார்
செந்துணர் நறுமலர் தெளித்துத் தேவர்மாட்
டிந்திர னனையவ னிறைஞ்சி யேத்தினான். 20

அந்தணர் - பிராமணர், ஆசு இடை கூறி - ஆசீர் வாதங்களை இடையிடையே வழங்கிக் கொண்டு, ஆய் மலர்ப் பைந்துணர் - சிறந்த மலர்களுடைய பசுமை யான கொத்துக்களை, நெடுமுடி-அரசனது நீண்டகிரீட முடைய தலைமீது, பயில - தங்கும்படி, ஏற்றினார் - வைத்தனர். தேவர்மாட்டு இந்திரன் அனையவன் - தேவர்களுக்கிடையில் இருக்கும் இந்திரன்போன்றவ னான அந்தப் பயாபதிவேந்தன், செம் துணர் நறு மலர் தெளித்து - செவ்விய கொத்துக்களாயமைந்த வாசனையுடைய மலர்களைத் தூவி, இறைஞ்சி - வணங்கி, ஏத்தினான்-(அவ்வந்தணர்களை) துதித்தான்.

அந்தணர்கள் மங்கல ஆசிகள் கூறி மன்னன் சென் னியில் மலர்களை இடவும், மன்னன் அவர் பாதங் களில் மலர்களைத் தூவி வணங்கித் துதிசெய்தான். அந்தணர் என்பது முனிவர்களைக் குறிக்கும். தன் முடிநிழல் முனிவரர் சரணம் மூழ்குகின்ற தன்மை யன் இம்மன்னன் என்பதைக் கவி முன்னரே கூறி யிருக்கின்றார்.

---

89. விரையமர் கோதையர் வேணுக் கோலின
ருரையமர் காவல்பூண் கடையி னூடுபோய்
முரசமர் முழங்கொலி மூரித் தானைய
னரசவை மண்டப மடைவ தெண்ணினார். 21.

விரை அமர் கோதையர் - வாசனையுடைய பூமாலை களை அணிந்தவர்களும், வேணுக் கோலினர் - மூங் கில்தடியை யுடையவர்களும் ஆகிய வீரர்களின், உரை அமர் - புகழ் தங்கிய, காவல்பூண் - காவலுடைய, கடையின் ஊடுபோய் - வாயில்களின் வழியாகச் சென்று, முரசு அமர் - முரசங்களுடன் சேர்ந்து, முழங்கு - ஆரவாரம் செய்கின்ற, ஒலி - ஒலியை யுடைய, மூரி - வலியமைந்த, தானையன் - சேனையை யுடைய அரசன், அரசு அவை மண்டபம் - இராஜ சபாமண்டபத்தை, அடைவது - அடையப்போகின் றான் என்பதை, எண்ணினார் - (அயலிருந்தவர்கள்) தெரிந்துகொண்டனர்.

அரசன், காவலுடைய வாயில்களைக் கடந்து சபா மண்டபம் செல்லக் கருதினான் என்பதை அயலிருந் தவர் தெரிந்துகொண்டுஅதற்கு ஆயத்தமாயினார் என் பது கருத்து. எண்ணினார் என்றில்லாது, 'எண்ணி னான். என இருக்குமாயின், தானையன் எண்ணினான், என இயைந்து எளிதிற் பொருள்படும்.

முரசமர் முழங்கொலி மூரித்தானை, என்பது முர சினது முழக்கத்தோடு சேர்ந்து ஆரவாரம் செய் கின்ற சேனை என்பது பொருள்.

---

90. பொன்னவிர் திருவடி போற்றி போற்றியென்
றன்னமென் னடையவர் பரவ வாய்துகிற்
கன்னியர் கவரிகா லெறியக் காவலன்
முன்னிய நெடுங்கடை முற்ற முன்னினான். 22.

பொன் அவிர் - பொன்போலப் பிரகாசிக்கின்ற, திருஅடி - திருப்பாதங்கள், போற்றிபோற்றி என்று- வாழ்க வாழ்க என்று, அன்னம் என் நடையவர்-அன் னத்தைப்போன்ற நடையை உடைய மாதர்கள், பரவ- துதிக்கவும்; ஆய் துகில் - ஆய்ந்தெடுத்த ஆடைகளை யணிந்த, கன்னியர் - கன்னிப்பெண்கள், கவரி - சாமரையிலிருந்து, கால் எறிய - காற்றை வீசவும், காவலன் - அரசன், முன்னிய - நினைத்தபடி, நெடும் கடை முற்றம்-பெரிய வாயில் இருக்கும் முற்றத்தை, முன்னினான் - அடைந்தான்.

அன்னமென்னடையவர் என்பதை, அன்னம் மெல் நடையவர், எனப் பிரித்து, அன்னம்போன்ற மெல்லிய நடையையுடைய மாதர் எனவும் பொருள் கொள்ளலாம்.

வாழி என்பதுபோல், போற்றி என்பதும் வியங் கோள்வினை.

---

91. மஞ்சிவர் வளநகர் காக்கும் வார்கழ
னஞ்சிவர் வேனர பதியை யாயிடை
வெஞ்சுடர் வாளினர் விசித்த கச்சையர்
கஞ்சுகி யவர்கண்மெய் காவ லோம்பினார். 23.

ஆயிடை - அப்பொழுது, மஞ்சு இவர் - மேகமண் டலம் வரையில் உயர்ந்திருக்கின்ற, வளநகர் - வளப்ப முடைய நகரத்தை, காக்கும் - காத்தளிக்கும், வார் - நீண்ட, கழல் - வீரக் கழல்களையும், நஞ்சு இவர் வேல் - நஞ்சு பூசிய வேலையும் உடைய, நரபதியை - அரசனை, வெம் சுடர் வாளினர் - பகைவர்க்குக் கொடியதாய் ஒளிசெய்கின்ற வாளை ஏந்தினவர்களும், விசித்த - இறுக்கிய, கச்சையர் - கச்சைக் கட்டி யிருப்பவர்களும், கஞ்சுகியர்வகள் - கஞ்சுகம் அணிந் தவர்களுமாகிய வீரர்கள், மெய் - அரசனது உடலை, காவல் ஓம்பினார் - கருத்துடன் காத்துவரலாயினார்.

கஞ்சுகம், என்பது சட்டை. அதையணிந்தவன் கஞ்சுகி. மெய்காப்பாளரை கஞ்சுகி என அழைப்பர். பணிந்தவரை அளிப்பதற்குக் கழல்களும், பணியா தாரைச் செகுப்பதற்கு வேலும் உடைய நரபதியாய்ப் பயாபதி அவ்வளநகர் காத்தனன். அக்காவலன் மெய் யைக் காக்கும் கஞ்சுகிகள் இங்குக் கூறப்பட்டிருப்ப வர்.

---

92. வாசநீர் தெளித்தலர் பரப்பி வானக
மேசுளி னிருக்கைய விலங்கு சென்னிய
மூசுதே னெடுங்கடை மூன்றும் போய்ப்புறத்
தோசைநீண் மண்டப முவந்த தெய்தினான். 24.

வாசம் நீர் தெளித்து-வாசனை பொருந்திய நீரைத் தெளித்து, அலர் பரப்பி - மலர்களைப்பரப்பி, வான் அகம் - வானத்தை, ஏசு - இகழ்கின்ற, உளின் இருக்கைய - உள்ளிடங்களை உடையனவும், இலங்கு- பிரகாசிக்கின்ற, சென்னிய - சிகரங்களை உடையன வும் ஆகி, தேன் - வண்டுகள், மூசும் - மொய்க்கும், நெடும் - பெரிய, கடை மூன்றும்-(அகவாயில் இடை வாயில் புறவாயில் என்ற) மூன்று வாயில்களையும், போய் - கடந்துபோய், புறத்து - வெளியில் உள்ள, ஓசை - (முரசங்கள், துழுமிய சனங்கள் முதலிய வைகளால் எழும்) ஓசையானது, நீள் - மிகுகின்ற, மண்டபம் அது - அந்த மண்டபத்தை, உவந்து எய்தினான்- (பயாபதிமன்னன்) உவகையோடு சேர்ந் தான்.

வானகம் ஏசு உளின் இருக்கை - வானத்தைக் காட்டிலும் விசாலமான உள்ளிடம் உடையனவாகை யால் வாயில்கள் வானத்தை இகழ்கின்றனவாம். மண் டபமுவந்த தெய்தினான் - என்பதில் மண்டபம் அது உவந்து எய்தினான், எனப் பிரித்துச் சேர்த்துக்கொண் டோம்.

மூசுதேன் நெடுங்கடை - என்பது, வாயில்கோபு ரங்களில் தேன்கூடுகள் கட்டியிருப்பதைக் குறிக்கின் றது போலும்.

தனிப்பாடல்கள்

யாழ்ப்பாணம் திரு. க. சோமசுந்தரம் பிள்ளை.

நாமகள் குயிற்பத்து.

பொன்பொதிந்த சிலைவளைத்துப் புரமூன் றெய்த
புண்ணியனும் பொறிமயில்வா கனனு மீயத்
தென்பொதிய முனிவளர்த்த திருவி னாளைத்
தென்பாண்டி நாடாளும் தமிழ்த்தெய் வத்தை
மின்பொதிந்த விடையாளை வெண்பட் டாடை
விரித்துடுத்து வெள்ளைமலர் மேவி னாளைக்
கொன்பொதிந்த மனவிருட்கோர் விளக்கா னாளைக்
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே 1.

வண்டாடுங் கருங்கூந்தல் காட்டி னாளை
வடமாடு நறுங்களப முலையி னாளைக்
கண்டோடும் மொழியாளைக் கலைவ லாளர்
கவியோடுந் திரிவாளைக் கனவின் மேலே
பண்டேறி விளையாடும் பாவை யாளைப்
பாண்டிநெடும் பதியாளைப் பாடை மாக்கள்
கொண்டாடித் திறைகொடுக்க வளரும் ஞானக்
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே 2.

தீராத கொடும்பிணிகள் தீர்க்கின் றாளைத்
தென்பாண்டி நாடாளுந் தமிழ்த்தெய் வத்தை
வாராத சித்தியெல்லாம் வருவிப் பாளை
மன்னரொரு மூவரையும் வாழ்வித் தாளைச்
சேராதார் மனத்தகத்தே தித்தி யாளைத்
திகழொளியை நறும்பாகைத் தேனைப் பாலைக்
கூராத மனங்கூர்வித் தெனையு மாண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே 3.

சுடுபிணியுங் கடுவிடமுந் தூரத்தி னாளைத்
தொண்டனுக்குக் கடவுளைத்தூ தாக்கி னாளை
அடுசுவையின் பாலமுதுந் தேனும் பாகும்
ஆகாத வினியமொழி அணங்கி னாளைக்
கடல்புடைசூழ் நெடுநிலத்துப் பதினெண் பாடைக்
காரரும்வந் தடிபரவுங் கற்பி னாளைக்
கொடுவினையும் பிணியுமறுத் தெனையு மாண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே 4.

ஆதிநடு முடிவுமிலா தமர்ந்த வாற்றால்
ஆருயிர்கட் குயிராகி யருளு மாற்றால்
ஓதுபணி மொழிதன்பா லுடைய வாற்றால்
ஊழிபல வுலப்பினுமா றுறாத வாற்றால்
பாதிமதி யேறுசடைப் பரனே யென்று
பாவலர்கள் நிதந்துதிக்கும் பனுவ லாளைக்
கோதுபதி யாதெனையுந் தடுத்தாட் கொண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே 5.

பங்குக்குப் பட்டபணந் துண்டம் மூன்று
பழமுதவ வாய்மலர்ந்த பாட்டி னாளைக்
கொங்குக்குக் கிழியறுத்துக் கொடுத்திட் டாளைக்
குயக்கொண்டான்உயிர்நீக்கிக்கொடுத்திட்டாளை
அங்கனுல குக்கொளியாய் அமர்ந்திட் டாளை
அறுந்தசிர மாயிரமு மடைவித் தாளைக்
குங்குமப்பூண் முலையாளை யெனையு மாண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே 6.

மூவாத சுவையமுதை முச்சங் கத்து
முளைத்தெழுந்த கற்பகத்தை முடிசேர் மன்னர்
பாவாலே யெழுதுவித்த பாவை யாளைப்
பாண்டிவளம் பதியரசு பயில்கின் றாளைக்
காவாருந் தென்பொதிய மலைமேற் றோன்றுங்
கலையாருஞ் சுடர்மதியைக் கனியைத் தேனைக்
கோவாத மணிமுத்தை யெனையு மாண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே 7.

விழிக்கின்ற விழிக்குள்ளே விளக்கா னாளை
மென்கரும்பைச் செழும்பாகை விளரி யாழைப்
பழிக்கின்ற மொழியாளைப் பலதேயத்துப்
பாடைமட மங்கையர்கள் பதஞ்சே விக்க
அளிக்கின்ற வருளாளை வறிவா னாளை
ஆசுமுத னாற்கவியின் பொருளை யள்ளிக்
கொழிக்கின்ற சிவக்கொழுந்தை யெனையு மாண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே 8.

அவியாத செழுஞ்சுடரை யன்பர்க் கென்று
மாறாத துன்பமெலா மாற்று வாளைக்
கவியாது மறியாவென் னாவின் மேவிக்
கவியுரைத்துக் கேட்டுமகிழ் கலைவ லாளைப்
புவியாத ரித்ததமிழ் புகல்கின் றாளைப்
பொதியமலை முனிமடியிற் பொருந்தி னாளைக்
குவியாத கஞ்சமலர் முகத்தி னாளைக்
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே 9.

மெய்முழுதும் பால்போலும் நிறத்தி னாளை
மேவுமறம் பொருளின்பம் வீடா னாளைக்
கையொருநான் குடையதமிழ்க் கற்ப கத்தைக்
கரும்புருவச் சிலையாளைக் கனிவா யாளைத்
தொய்யில்வள முலையாளைச் சுடருஞ் சங்கத்
தொடியாளைப் பிடியானை நடையி னாளைக்
கொய்மலர்ச்சே வடிகாட்டி யெனையு மாண்ட
குலக்கொடியைப் பூங்குயிலே வரக்கூ வாயே. 10

யாப்பிலக்கணம்

தளை

[170-வது பக்கத் தொடர்ச்சி]

ஒருசீர் அதற்கு அடுத்த சீரோடு ஓசைகொள்ள நிற்கின்ற முறையே தளையெனப்படுவது. அத்தளை வகைகள் நான்கினுள் ஆசிரியத்தளை அமையுமாறு எவ்வாறெனச் சென்றவாரம் கூறினோம். ஈரசைச்சீர் (இயற்சீர்) நின்று, அதன் ஈற்றசையும் வரும்சீரின் முதலசையும் (அவ்வருஞ்சீர் மூவசைச் சீராயிருப்பினும் இருக்கலாம்) ஒன்றுமாயின் ஆசிரியத்தளை அமையும். அசைகள் நேர், நிரை, என இரண்டு வகைப்படுமாதலின் ஆசிரியத்தளையும், நேரொன்றிய ஆசிரியத்தளை, நிரையொன்றிய ஆசிரியத்தளை என இருவகை யாதல் வேண்டும்.

நற்றிணையில் செம்பியனார் பாடிய ஆசிரியப்பா ஒன்றை வரைந்து அதன்கண் அமைந்த ஆசிரியத்தளைகளை ஆராய்வோம்:—

> கொடுங்குரல் குறைத்த செவ்வாய்ப் பைங்கிளி
> யஞ்ச லோம்பி யார்பதங் கொண்டு
> நின்குறை முடித்த பின்றை யென்குறை
> செய்தல் வேண்டுமால் கைதொழு திரப்பல்
> பல்கோட் பலவின் சார லவர்நாட்டு
> நின்கிளை மருங்கிற் சேறி யாயி
> னம்மலை கிழவோர்க் குரைமதி யிம்மலைக்
> கானக் குறவர் மடமக
> ளேனல் காவ லாயின ளெனவே.

[தினைப்புனங் காப்பதென்னும் நிபம்வைத்துத் தன்மகள் களவொழுக்கம் பூண்டு ஒழுகுகின்றாள் என்று ஐயமுற்ற நற்றாய் அவளை வீட்டின்கண் அடைத்துவிட, அம்மகளின் காதலன் வந்துவந்து வீணே அவளைப் பலமுறை தேடியும் காணுமையாலே வருந்தினனாய்த் தன்னிடத்தே தங்கிவிடுதலும், சிலநாட் சென்றபின், மீண்டும் தினைப்புனங் காவலுக்கு அன்னையால் அனுப்பப்பெற்ற அத்தலைமகள், "இப்பொழுது நீ வரின் என்னை எய்தலாம்" என்னுங் குறிப்பைத் தலைமகனுக்குத் தெரிவித்து அவனை வரவழைக்க நினைத்துக் கிளியினைத் தூதுபோக்கிய செய்தியைக் கூறும் இப்பாட்டின் பொருள் பின்வருமாறு:—"வளைந்த கதிர்களைக் கொய்து அறுக்கின்ற சிவந்த வாயுடைய பசுங்கிளியே, நீ சிறிதும் அஞ்சாது உனக்கு வேண்டிய அளவு உணவினை உண்டு உன் குறையை முடித்துக்கொண்டபின் என்குறையையும் நீ முடித்துவைக்க, உன்னைக் கைதொழுது வேண்டிக் கொள்கின்றேன். பல காய்களையுடைய பலாமரங்களையுடைய சாரலையுடைய அவர் நாட்டிலுள்ள உன் சுற்றத்தாரை நீ காண்பதற்கு அடைவாயாயின், அம்மலைக்குத் தலைவரிடம், "இந்த மலையிலுள்ள காட்டில் வசிக்கும் குறவரது இளமகள் தினைப்புனங் காத்துக்கொண்டிருக்கின்றாள்" என்பதைச் சொல்வாயாக.]

கொடுங்குரல் குறைத்த = கருவிளம் + புளிமா— நிலைச்சீராகிய கொடுங்குரல் என்பது ஈரசைச்சீர். அதன் இறுதியில் 'குரல்' என்னும் நிரையசை யிருக்கின்றது. வருஞ்சீராகிய குறைத்த, என்பதன் முதலிலும் 'குறைத்' என்ன நிரையசையே யுளது. ஆகையால் இது ஆசிரியத்தளை. ஈரிடத்தும் இருப்பது நிரையசையாதலால், இது நிரை ஒன்றிய ஆசிரியத்தளை. வருஞ்சீரும் இயற்சீராகையால் இது நிரையொன்றிய சிறப்புடை ஆசிரியத்தளை.

குறைத்த செவ்வாய்ப் = புளிமா + தேமா—நேரொன்றிய சிறப்புடைய ஆசிரியத்தளை.

செவ்வாய்ப் பைங்கிளி = தேமா + கூவிளம் — நேரொன்றிய சிறப்புடை ஆசிரியத்தளை.

பைங்கிளி யஞ்ச = கூவிளம் × தேமா—நிலைச்சீர் இயற்சீராயினும் அதன் ஈற்றில் 'கிளி' என்னும் நிரையசையும், வரும் சீராகிய யஞ்ச என்பதன் முதலில் 'யஞ்' என்னும் நேரசையுமாக ஒன்றுமல் நிற்பதால் இது ஆசிரியத்தளை யாகாது. (இது வெண்டளை யாகும். அதனைப் பின்னர்ப் பார்ப்போம்).

யஞ்ச லோம்பி = தேமா + தேமா — நேரொன்றிய சிறப்புடை யாசிரியத்தளை.

லோம்பி ஆர்பதங் = தேமா + கூவிளம்—நேரொன்றிய சிறப்புடை ஆசிரியத்தளை.

ஆர்பதங் கொண்டு = கூவிளம் × தேமா—ஆசிரியத்தளை அன்று.

கொண்டு நின்குறை = தேமா + கூவிளம்—நேரொன்றிய சிறப்புடை ஆசிரியத்தளை.

நின்குறை முடித்த = கூவிளம் + புளிமா—நிரையொன்றிய சிறப்புடை ஆசிரியத்தளை.

முடித்த பின்றை = புளிமா + தேமா — நேரொன்றிய சிறப்புடை ஆசிரியத்தளை.

பின்றை யென்குறை = தேமா + கூவிளம்—நேரொன்றிய சிறப்புடை ஆசிரியத்தளை.

யென்குறை செய்தல் = கூவிளம் × தேமா— ஆசிரியத்தளை அன்று.

செய்தல் வேண்டுமால் = தேமா + கூவிளம்—நேரொன்றிய ஆசிரியத்தளை.

வேண்டுமால் கைதொழு = கூவிளம் × கூவிளம்— ஆசிரியத்தளை யன்று.

குறிப்பு :—'கைதொழு' என்னுஞ் சீரில், முதலிலுள்ள, 'கை' என்னும் ஐகாரத்துடன் சேர்ந்த உயிர்மெய், ஒன்றரைமாத்திரை பெறுமாகையால் ஒரு நேரசை ஆயிற்று. (108-வது பக்கம்).

கைதொழு திரப்பல் = கூவிளம் + புளிமா — நிரையொன்றிய சிறப்புடை ஆசிரியத்தளை.

திரப்பல் பல்கோட் = புளிமா + தேமா—நேரொன்றிய சிறப்புடை சிறப்புடை ஆசிரியத்தளை.

பல்கோட் பலவின் = தேமா × புளிமா—ஆசிரியத்தளை யன்று.

பலவின் சார = புளிமா + தேமா — நேரொன்றிய ஆசிரியத்தளை.

சார லவர்நாட்டு = தேமா × புளிமாங்காய்—ஆசிரியத்தளை ஆகாது. இது ஆசிரியத்தளை ஆகாததற்குக் காரணம் வருஞ்சீர் மூவசைச் சீராக இருப்பதன்று. நிலைச்சீர் ஈரசைச் சீராயிருக்குமாயின் வருஞ்சீர் மூவசைச் சீராக இருந்தும் ஆசிரியத்தளை அமையலாம். ஆனால் இங்கு, நிலைச்சீர் இறுதியில் நேரசையும் வருஞ்சீர் முதலில் நிரையசையுமாக ஒன்றுமல் நிற்பதால் ஆசிரியத்தளை அமையவில்லை. இப்படிக்

கின்றிச் சார லந்நாட்டு, என இருக்குமாயின், நிலைச்சீரிறுதி வருஞ்சீர் முதல் ஆகிய ஈரிடத்தும் நேரசையே நின்று ஒன்றுவதால், அவ்வருஞ்சீர் மூவசைச் சீராயினும் ஆசிரியத்தளையே அமைந்ததாகும். ஆனால் வருஞ்சீரும் இயற்சீரா யில்லாமல் உரிச்சீராயிருப்பதால், அது நேரொன்றிய சிறப்பில் ஆசிரியத்தளை எனப்படும்.

லவர்நாட்டு நின்கிளை = புளிமாங்காய் × கூவிளம்— இது ஆசிரியத்தளையன்று. நிலைச்சீர் இறுதி வருஞ்சீர்முதல் ஆகிய ஈரிடத்தும் நேரசைகளே ஒன்றி நிற்பினும், நிலைச்சீர் மூவசைச்சீராதலால் ஆசிரியத்தளை அமைவதற்கில்லை.

நின்கிளை மருங்கிற் = கூவிளம் + புளிமா — நிரையொன்றிய சிறப்புடை ஆசிரியத்தளை.

மருங்கிற் சேறி = புளிமா + தேமா—நேரொன்றிய சிறப்புடை ஆசிரியத்தளை.

சேறி யாயி = தேமா + தேமா — நேரொன்றிய சிறப்புடை ஆசிரியத்தளை.

யாயி னம்மலை = தேமா + கூவிளம் — நேரொன்றிய சிறப்புடை ஆசிரியத்தளை.

னம்மலை கிழவோர்க் = கூவிளம் + புளிமா — நிரையொன்றிய சிறப்புடை ஆசிரியத்தளை.

கிழவோர்க் குரைமதி = புளிமா × கருவிளம் — ஆசிரியத்தளை யன்று.

குரைமதி யிம்மலைக் = கருவிளம் × கூவிளம்—ஆசிரியத்தளை யன்று.

யிம்மலைக் கானக் = கூவிளம் × தேமா—ஆசிரியத்தளை யன்று.

கானக் குறவர் = தேமா × புளிமா — ஆசிரியத்தளை யன்று.

குறவர் மடமக = புளிமா × கருவிளம்—ஆசிரியத்தளை யன்று.

மடமக ளேனல் = கருவிள × தேமா—ஆசிரியத்தளை யன்று.

ளேனல் காவ = தேமா + தேமா — நேரொன்றிய ஆசிரியத்தளை.

காவ லாயின = தேமா + கூவிளம்—நேரொன்றிய ஆசிரியத்தளை.

லாயின ளெனவே = கூவிள + புளிமா — நிரையொன்றிய ஆசிரியத்தளை.

இங்கு எடுத்தெழுதிய இப்பாட்டு, ஆசிரியப்பா எனப்படும். ஆசிரியப்பாவில் மூவசைச்சீர் வரலாகாது என்பதில்லை எனினும் ஈரசைச்சீரே அதிகமும் வரும். ஆகையாற்றான், ஆசிரியப்பாவில் அதிகமும் வருகின்ற உரிமைபற்றி ஈரசைச்சீரை ஆசிரியஉரிச்சீர் என்றும் வழங்குவர். இப்பாட்டில் 'லவர்நாட்டு' என்னும் ஒரு சீரைத்தவிர மற்றவெல்லாம் ஈரசைச்சீர்களே. இவ்வீரசைச்சீர்களும் ஆசிரியத்தளையாக ஒன்றி வருவதும் பெரும்பாலும், ஆசிரியப்பாவினுள் வேண்டப்படும். ஆயினும் அவ்வாறு ஒன்றுமல் வேற்றுத் தளையாய் வருவதும் பிழையன்று. பெரும்பகுதி ஆசிரியத்தளையாவது வேண்டும். இந்தப்பாட்டிலுள்ள 34 தளைகளில் 13 தவிர மற்றவையெல்லாம் ஆசிரியத்தளைகளே. ஆசிரியப்பாவின் இலக்கண விரிவுகளைப் பின்னர்க் கூறுவோம். இனி வெண்டளைக்குச் செல்லலாம்.

2. வெண்டளை.

வெண்பா என்னும் பாட்டில் வரவேண்டிய தளை வெண்டளை (வெண் + தளை = வெண்டளை). ஆசிரியப்பாவினுள் வெண்டளை வந்தாலும் வரலாம். ஆயினும் வெண்பாவினுள்ளோ ஆசிரியத்தளையாகிலும் வேறெந்தத் தளையாகிலும் வரலாகாது. வெண்பாவினுள் வரக்கூடிய தளை ஒன்றே; அது வெண்டளை. சீர்களில், ஈரரைச் சீர்களும் மூவசைச் சீர்களும் வெண்பாவினுள் வரலாம். ஆனால், ஈரசைச்சீர்களில் தேமா புளிமா கருவிளம் கூவிளம் என்னும் நான்குவிதச் சீர்களும் வரக்கூடியனவாயிருக்க மூவசைச் சீர்களில், நேரசையில் முடிகின்ற நான்குசீர்கள் மாத்திரந்தான் வெண்பாவினுள் வரக்கூடும். மூவசைச் சீர்களில் தேமாங்காய் புளிமாங்காய் கருவிளங்காய் கூவிளங்காய், என்னும் இந்நான்கு சீர்கள்தான் வெண்பாவினுள் வரக்கூடுமாகையால் இந்தக் காய்ச்சீர்களுக்கு வெண்பாஉரிச்சீர் என்னும் பெயர் வந்தது. அல்லது வெண்பாஉரிச்சீர் என்பதை வெண்சீர் எனக் குறுக்கியும் வழங்குவர். ஒரு வெண்பாவில் எல்லாம் இயற்சீர்களாயிருந்தாலும் இருக்கலாம்; (இறுதிச் சீர்தவிர) வெண்சீர்களா யிருந்தாலும் இருக்கலாம்; அல்லது இயற்சீரும் வெண்சீரும் கலந்துவரினும் வரலாம். இப்படிக் கலந்துவருவதே பெரும்பாலும் இயற்கை. சீர்கள் எவைகளாயிருப்பினும் அவைகள் ஒன்றோடொன்று தொடர்வதுமாத்திரம் வெண்டளைகளாகவே இருந்து தீரவேண்டும்.

ஆசிரியத்தளையில் கருதியதுபோலவே வெண்டளையினும் நிலைச்சீர் எது வென்பதும் அதன் ஈற்றில் என்ன அசை இருக்கின்றதென்பதும் ஆகிய இரண்டையும் கருதி, வருஞ்சீர் எதுவாயினும் அதன் முதலில் என்ன அசை இருக்கின்றது என்பதை மாத்திரம் கருதினுற்போதும். அப்படிக் கருதுங்கால் வெண்டளை இரண்டுவிதமாக அமையக்கூடும் என்பது புலப்படும். இப்பொழுது ஒரு வெண்பா எடுத்துக்கொள்வோம்:—

> பாலன் றனதுருவா யேழுலகுண் டாலிலையின்
> மேலன்று கண்டுயின்றாய் மெய்யென்ப—ராலன்று
> வேலைநீ ருள்ளதோ விண்ணதோ மண்ணதோ
> சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்.

[சோலை சூழ்ந்த கோவர்த்தனமலையை எடுத்தவனே நீ, பாலன் உருவமெடுத்து ஏழுலோகத்தையும் உண்டு ஆலஇலையின்மேல் அந்நாள் உறங்கினையென்பது மெய் என்று உலகோர் உரைக்கின்றார். ஆனால், அந்த ஆலஇலை அன்றையதினம், கடல்நீரிலோ ஆகாயத்திலோ பூமியிலோ எங்கு இருந்தது சொல்—உலகமெல்லாம் உன்வயிற்றுள் போனதென்றால் ஆல இலை மாத்திரம் ஒன்று எப்படிப் புறத்தே இருக்க இயலும்.]

இந்தச் செய்யுளின் சீர்களை வாய்பாட்டில் எழுதிப் பார்ப்போம் :—

தேமா கருவிளங்காய் கூவிளங்காய் கூவிளங்காய் [காய்
தேமாங்காய் கூவிளங்காய் தேமாங்காய்—தேமாங்
கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளம்
கூவிளம் கூவிளங்காய் நாள்.

இதனில் நிலைச்சீர் இயற்சீராயிருந்தால் அதன் ஈற்றசையும் வருஞ்சீர் முதலசையும் ஒன்றுமல் மாறி வருகின்றன. ஆனால் நிலைச்சீர் வெண்சீரா யிருந்தால் அதன் ஈற்றிலுள்ள நேரசையைப் போலவோ

வருஞ்சீர் முதலசையும் நேரசையாக இருக்கின்றது. ஆகையால் வெண்சீர் இரண்டு வகைப்படும் :—

1. நிலைச்சீர் இயற்சீராயிருந்தால், வருஞ்சீர் எதுவாயினும் அதன் முதலசை, நிலைச்சீரின் ஈற்றசைக்கு மாருக இருப்பது.நேரசையை யீற்றலுடையது நிலைச்சீர் இயற்சீராயின், வருஞ்சீரின் முதலில் நிரையசை நிற்க வேண்டும். நிலைச்சீராகிய இயற்சீரின் ஈற்றின் நிரையசை நிற்குமாயின் வருஞ்சீரின்முதலசைநேரசையாக இருக்கவேண்டும். இப்படி நிலைச்சீர் இயற்சீராயிருந்து வருஞ் சீர் முதலசையோடு மாறிஅமைகின்ற வெண்டளைக்கு இயற்சீர்வெண்டளை எனப் பெயர். வருஞ்சீரும் இயற்சீராகவே இருக்குமாளுல் அது சிறப்புடை இயற்சீர்வெண்டளை ஆகும். வருஞ்சீர் வெண்சீராயின், சிறப்பில் இயற்சீர் வெண்டளை ஆகும்.

2. நிலைச்சீர் வெண்சீராயின், அதன் ஈற்றில் இருக்கும் நேரசையைப்போல் வருஞ்சீரின் முதலிலும், அது எதுவாயிருப்பினும், நேரசையே ஒன்றி இருக்க வேண்டும். இப்படிவரும் வெண்டளையை வெண்சீர் வெண்டளை என்பர். வருஞ்சீரும் வெண்சீராயின், சிறப்புடை வெண்சீர்வெண்டளை; அல்லதெனின் சிறப்பில் வெண்சீர் வெண்டளை.

இவ் விதிகளை நினைவிற்கொண்டு இந்த வெண்பாவிலுள்ள தளைகள் வெண்டளைகளாய் அமைந்திருக்கின்ற விதங்களை ஆராய்ந்து பயின்றுகொள்க.

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

21. வாக்கு ஸ்தம்பனம்

[171-வது பக்கத் தொடர்ச்சி]

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலா
னேழண்டத் தப்பாலா னிப்பாற் செம்பொன்
புனத்தகத்தா னறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையா னெருப்பிடையான் காற்றி னுள்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான் [ளான்
காளத்தி யானவனென் கண்ணு ளானே.

திருக்காளத்தி - திருத்தாண்டகம் 5.

அடியார் வாக்கு கடவுள் வாக்கே.

நமது சமயகுரவர், தமது திருவாக்கே பரமன் வாக்காய் அப்பரமனாலும் கொள்ளப்பட்டதென அறிந்து ஈசனை ஆங்காங்குப் புகழ்வதைத் தேவாரங்களிற் காணலாம்.

மலையினார் பருப்பதந் துருத்திமாற் பேறு
மாசிலாச் சீர்மறைக் காடுநெய்த் தானம்
நிலையினா னெனதுரை தனதுரை யாக
நீறணிந் தேறுகந் தேறிய நிமலன்
கலையினார் மடப்பிணை துணையொடுந் துயிலக்
கானலம் பெடைபுல்கிக் கணமயி லாலும்
இலையினார் பைம்பொழி லிலம்பையங் கோட்டு
ரிருக்கையாப் பேணியென் னெழில்கொள்வ தியல்பே?

சம்பந்தர்.

[குறிப்பு:—இப்பதிகம் முற்றும் ஒவ்வொரு செய்யுளும் எனதுரை தனதுரையாகக் கொண்டனன் தலைவனெனப் பாடியிருப்பதைக் காண்க.]

ஏனெனில், பரமனைப்பாடும் திருநாவானது பரிசுத்தமாய்ப் பின்னர்க் கடவுள்மயமாய் நின்று தனக்கும் தன்னைச்சார்ந்த பிறருக்கும் பேரின்பம் விளைக்கும். அவ்வாறு வாழாது வேறுவழியிற் செல்லும் நாவுடையோர் யாதும் உடையோராகார். இதற்குச் சான்று திருநாவுக்கரசின் தேவாரத்தினின்றும் அநுமானிக்கலாம்:—

வாக்கினா லின்பு ரைத்து வாழ்கிலார் தம்மை யெல்லாம்
போக்கினாற் புடைத்தவர்க ளுயிர்தனை யுண்டு மாறுன்
தேக்குநீர் செய்த கோயி றிருவிரா மேச்சு ரத்தை
நோக்கினல்வணங்குவார்களோப்வினை நாணுகுமன்றே

திருவிராமேச்சுரம் - திருநேரிசை 7.

அஞ்சுண்ண வண்ணனே யென்றே னானே
யடியார்கட் காரமுதே யென்றே னானே
நஞ்சணி கண்டனே யென்றே னானே
காவலர்க ளெம்மறையே யென்றே னானே
நெஞ்சுணர வுள்புக் கிருந்த போது
நிறைவு மமுதமே யென்றே னானே
அஞ்சாதே யாள்வானே யையா றன்னே
யென்றென்றே யானரற்றி நைகின் றேனே.

திருவையாறு - திருத்தாண்டகம் 3.

விழையா ருள்ள நன்கெழு நாவில்
வினைகெட வேதமா றங்கம்
பிழையா வண்ணம் பண்ணிய வாற்றூற்
பெரியோ ரேத்தும் பெருமான்
தழையார் மாவின் றூழ்கனி யுந்தித்
தண்ணரி சில்புடை சூழ்ந்து
குழையார் சோலை மென்னடை யன்னங்
கூடு பெருந்துறை யாரே.

சம்பந்தர்.

வாக்கின் செய்கை நிற்கும் காரணங்கள்.

பிணியின் கொடுமையால் பேச்சு நின்றுவிடுவது வாக்குஸ்தம்பனக் கலையின்பால் வராது. தேகந்தான் திடமாகப் பிணியின்றிவாழும் கல்வியறிவு நிறைந்த மக்களை வாயெழ வொட்டாது செய்வதே இக்கலையின் திறனும். இதுவும் மற்றக்கலைகள்போல் சிவசக்தியால் விளங்கக் கூடியதன்றி, தனியே பிரகாசிக்காது.

குண்டும் தேருங் கூறை களைந்துங்
கூப்பிலர் செப்பில ராகி
மிண்டும் மிண்டர் மிண்டவை கண்டு
மிண்டு செயாது விரும்பும்
தண்டும் பாம்பும் வெண்டலை சூலம்
தாங்கிய தேவர் தலைவர்
வண்டுந் தேனும் வாழ்பொழிற் சோலை
மல்கு பெருந்துறை யாரே.

சம்பந்தர்.

மணிவாசகப்பெருமான் ஊமைப் பெண்ணைப் பேச வைத்ததும், புத்தகுருவை ஊமையாக்கியதும் வாக்குஸ்தம்பனக் கலையே யாகும். இது மணிவாசகருக்கு ஊள்ளிருந்தெழுந்த கோபத்தால் அவர் சிவசக்தி பாய்ந்து ஊமைப்பெண் வாக்கினைச் சுதந்தம் செய்து வைத்ததுபோல், புத்தகுருவின் * வாயையும் எழ வொட்டாமற் செய்தது. இது இக்காலத்தில் சில யோகிகள் பாம்பைக்கட்டும் மந்திரத்தில் பயின்று பிரயோகிக்கின்றனர். வாய்கட்டிய ஒரு நல்ல பாம்பு இரையுங் கொள்ளாது; கடிக்கவும் சக்தியற்று நிற்கும். அக்கட்டை அவிழ்த்தாலன்றி அந்நாகம் மரணமே யடையுமாதலால் அத் தீத் தொழில், பாம்பு மந்திரம் உணர்ந்தோர் செய்யலாகாதென்று இக்காலத்திலும் கண்டிக்கப்படுவதை நமது கிராமங்களிற் காண்கின்றோமன்றோ? மணிவாசகப் பெருமான் போன்ற மகான்கள், சிந்தித்தமாத்திரத்தில் எவன் வாக்கையும் ஸ்தம்பிக்கச் செய்யலாம். ஆனால் சாதாரண மனிதர் மந்திரபலத்தாலே இக்காரியஞ் செய்யச் சித்திபெறுகின்றனர். ஆயினும் இத்தொழில் கொடுந்தொழிலென்றும், தீய ஜந்துக்களிடத்தும் நிஷ்காரணமாய்ப் பிரயோகிக்கலாகாதென்பதும் மேலோர் ஆணையாகும்.

இவ்வாறு சக்தி பாய்ச்சலாலும் மந்திர பலத்தாலும் வாக்குஸ்தம்பனம் நேர்வதன்றி, பின்னும் பல காரணங்களாலும் † பேச்செழாமல் நிற்பதும் உண்டு. அவை: பேரன்பு, காதல், ஆச்சரியம் முதலியன.

நஞ்சடைந்த கண்டத்தர் வெண்ணீ றுடி
நல்ல புலியதண்மே லாகங் கட்டிப்
பஞ்சடைந்த மெல்விரலாள் பாக மாகப்
பாரப்த் துறையே னென்றார் பவளவண்ணர்
துஞ்சிடையே வந்து துடியுங் கொட்டத் [டேன்
துண்ணென் றெழுந்திருந்தேன் சொல்ல மாட்
புன்சடையின் மேலோர் புனலுஞ் சூடிப்
புறம்பய நம்மூ ரென்று போயினாரே.

திருப்புறம்பயம் — திருத்தாண்டகம் 6.

விள்ளத்தா னொன்று மாட்டேன்
விருப்பெனும் வேட்கை யாலே
வள்ளத்தேன் போல நுன்னை
வாய்மடுத் துண்டி டாமே
யுள்ளத்தே நிற்றி யேனு
முயிர்ப்புளே வருதி யேனுங்
கள்ளத்தே நிற்றி யம்மா
வெங்ஙனங் காணு மாறே.

தனித் திருநேரிசை 7.

இக்கலையின் அடிப்படை.

ஏனைய ஸ்தம்பனக்கலைகளுக்குப் பஞ்சாட்சரமந்திரமே உறுதியாய் நிற்பதுபோல், அத் துணையின்றி இக்கலையும் பயிலொணாதென்பது ஆன்றோர் துணிவு. அவ்வைந்தெழுத்துக்கள் உச்சரிக்கும் முறையிலே கலைக்கும் தொழிலுக்கும் ஏற்றவாறு மாறுதல் அடையும். அவை குருமூர்த்தமாய்க் கொண்டாலன்றித் தக்கவழியும் விளங்காது, பயனும் தாராது:—

மாச்செய்த குரம்பை தன்னை
மண்ணிடை மயக்க மெய்து
நாச்செய்து நாலு மைந்து
நல்லன வாய்தல் வைத்துக்
காச்செய்த காயந் தன்னு
ளித்தனு மைவர் வந்து
கோச்செய்து குமைக்க வாற்றேன்
கோவல்வீ ரட்ட னீரே.

திருக்கோவலூர் வீரட்டம் - திருநேரிசை 6.

நமச்சி வாயவென் பாருள ரேலவர்
தமர்ச நீங்கத் தவநெறி சார்தலால்
அமைத்துக்கொண்டதோர் வாழ்க்கையனாகிலும்
இமைத்து நிற்பது சால வரியதே.

சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை 22.

வாக்குஸ்தம்பனக் கலையின் மந்திரம் பயின்றவர் அவ்வழியிற் செல்லாதவராயின்

இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேற்பிற வித்துயர் நீத்திடும்
எம்மை யாளு மிடைமரு தன்கழல்
செம்மை யேதொழு வார்வினை சிந்துமே.

திருவிடைமருதூர் - திருக்குறுந்தொகை 4.

மற்றோரிடத்திலும் திருநாவுக்கரசு இதைக் குறிப்பா யுணர்த்துவார்.

மணவன் காண்மலை யாணெடு மங்கலக்
கணவன் காண்கலை ஞானிகள் காதலெண்
குணவன் காண்குரங் காடு துறைதனில்
அணவன் காணன்பு செய்யு மடியர்க்கே.

திருத்தென்குரங்காடுதுறை - திருக்குறுந்தொகை 14.

---

*காடுடைய நாதன்பா னன்றென்றுஞ்
செய்மனமே நம்மை நாளுந்
தாடுடைய தருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட் கொள்வான்
மோடுடைய சமணர்க்கு மூடையுடைய
சாக்கியர்க்கு மூடம் வைத்த
பீடுடைய புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே.

சுந்தரர்.

† அரச னிக்கு மரக்க னவன்றனை
உரைகெ டுத்தவ னொல்கிட
வரமி குத்தவெம் மாற்பே றடிகளைப்
பரவி டக்கெடும் பாவமே — சம்பந்தர்.

இவ்வாண்டில் புதிய சந்தாநண்பர்களாய்ச் சேர்ந்திருப்பவர்க்கு 1930-வது ஆண்டு இதழ்கள் வேண்டு[illegible]னை வரைதல் நலம். ஆப்லெதர் பைண்ட செய்து த[illegible] 10. வரைந்து பணத்தையும் அனுப்பிவைக்க[illegible]ம். மானேஜர்

188908
சென்னை 600 005
3L
m 21", N28KN
NB14'10

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[173-வது பக்கத் தொடர்ச்சி]

(புலன்கள் - Perception)

ஊற்றுப் புலன்கள்

நம் மீந்தோல் வழியாகப் பலவகையான தூண்டல்களை அறிகின்றோம். பிறர் நம்மைத் தொடுவதனையும் உறுத்துவதனையும் அறிகின்றோம்; சூடு, குளிர்ச்சி என்பவற்றை உணர்கின்றோம்; நோவெடுத்தலும் அவ்வழியாகத்தான் விளங்குகின்றது. இவையனைத்தையும் பொதுவாக ஊற்றுப்புலன்கள் என வழங்கி வருகின்றோம். ஆனால், ஊன்றிப்பார்த்து ஆராயும்போது தொடுபுலன், உறுத்துபுலன், சுடுபுலன், குளிர்புலன், நொப்புலன், என்ற வேற்றுமை வெளியாகின்றது. இவைகளுக்குப் புகுவாய்களும் (Receptors) பலவகையாக அமைந்துகிடக்கின்றன. இவை ஓரே புலனாக விளங்கினால், நோயினால் இவற்றில் யாதேனும் ஒரு புலன் கெட்டபோது மற்றைய புலன்களும் கெடுதல் வேண்டும். ஆனால், நோயாளிகளிடையே இவற்றில் ஏதேனும் ஒரு புலன் கெட்டிருந்தாலும் மற்றைய புலன்கள் கெடாது விளங்கக் காண்கின்றோம். எனவே, இவை வேறுவேறு புலன்கள் என்பது வெளியாகின்றது. நமது தோலின் சில இடங்கள் சூட்டைமட்டும் அறியும்; சில குளிரைமட்டும் அறியும்; சில நோதலைமட்டும் அறியும். சூடான ஊசிகொண்டு தோலின் ஒரு பிரிவில் மெல்லக் குத்திக்கொண்டே போவோமானால், சிற்சில விடங்கள்தான் சூடறிவதைக் காண்போம். அவ்வாறு சூடெழும்இடங்களை ஒருநிறப் புள்ளிகளால் குறித்து வைப்போமாக. குளிர்ந்த ஊசிகொண்டு குத்திக்கொண்டேபோனால் வேறு சில இடங்களில்தான் நாம் குளிரறிவதைக் காண்போம். அவ்விடங்களை வேறுநிறப் புள்ளிகளால் குறித்து வைப்போமாக. இவ்வாறே சிற்சில இடங்களில்மட்டும் குத்தும் நோவும், சிற்சில இடங்களில் உறுத்துவதும் புலனாகின்றன. அவ்விடங்களை வெவ்வேறுநிறப் புள்ளியால் குறித்துவைப்போமாக. இந்த வகையாக நம் கண்ணெதிரேயே, தோலில் பல ஊற்றுப்புலன்கள் பலவும் பலவேறு இடங்களில் எழுவதைச் செய்க்காட்சியால் காணலாம்.

இவற்றின் புகுவாய்களில் சில தோலின் மேற்புறத்திலேயே இருக்கின்றன; சில உட்டோலில் இருக்கின்றன. குளிரை விரைவில் அறிகின்றோம்; சூட்டினைச் சிறிதுகாலந் தாழ்ந்தே அறிகின்றோம். ஆதலின் குளிர்புலனின் புகுவாய் தோலின்மேலும், சுடுபுலனின் புகுவாய் தோலின்உள்ளும் உள்ளன என்பதும் விளங்கவில்லையா. குளிர்புலன்போலத் தொடுபுலனும் மீந்தோற் புலனேயாகும். சுடுபுலன்போல உறுத்துபுலன் உட்டோல் புலனாம். இப்புலன்களின் புகுவாய்கள் உடலின் புறத்தே முழுதும் பரவி இருக்கின்றன. மயிர்க்கால்கள்தோறும் தொடுபுலனின் புகுவாய் உண்டு. கண் நாக்கு முதலிய உறுப்புக்களிலும் அவையுள்ளன. உடலினுள்ளே உள்ள உறுப்புக்களிலும் தொடுபுலப் புகுவாய் உண்டு. ஆனால், அவ்வுறுப்புக்கள் சூடும் குளிரும் அறிவதாக ஏற்படவில்லை.

சுடுபுலனும் குளிர்புலனும் சூடு குளிர்ச்சி, எனத் தனித்தனி ஒவ்வொரு பண்பே யுடையன. இரண்டும் ஒன்றாகத் தூண்டப்பட்டபோது வெப்பம் புலனாகிறது. தொடுதலும் உறுத்தலுமாக விளங்குவதுபற்றித் தொடுபுலனைத் தொடுபுலன் என்றும் உறுத்துபுலன் என்றும் வகைசெய்கின்றனர் பலர். தொடுபுலன் வழியாக வழவழப்பு, சுறசுறப்பு, தைவரல், ஈரம், ஒட்டுதல் முதலிய வேற்றுமையை அறிகிறோம். ஊறல் எடுத்தல், சுள்ளிடுதல், (Tangle) "கிலுகிலுத்தல்" (Tickle) முதலியனவும் தொடுபுல் வகையேயாம்.

2 m. g. (Gram-எடை: m. g: கீழ்த்தரவெடை) எடையுள்ள கடற்பஞ்சு நம் விரல் நுனியில் படுமானால் அது புலனாகின்றது. அதிலும் எடையிற் குன்றந்தவைகள் புலனாவதில்லை.

கொதிக்கும் நீரின் சூட்டின் உரத்தை 100 பிரிவுகள் ஆகப் பிரிக்கின்றனர். ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சுழி என்றே வழங்குகின்றனர். இவ்வாறு பிரித்துப் பலவகையான் சூட்டுநிலைகளை அளக்தறிகின்றனர். கொதிக்கும் நீரின் சூட்டை 212 சுழிகளாகப் பிரித்தாராய்வதும் உண்டு. நம்முடலின் சூட்டிற்கு மேல் அரைக்காற் சுழி(1/8o) அளவுகூடுமினும் குறையினும், சுடுபுலனும் குளிர்புலனும் அவற்றையே அறிகின்றன. அரைக்காற் சுழிக்கும் குறைந்த வேற்றுமைகள் புலனாவதில்லை.

தொடுபுலன், கட்புலன்போலப் பலவகைப்படாதுநின்றாலும், சிறப்புடையதேயாம். நம்மைச் சுற்றிலும் உள்ள பொருள்களைப்பற்றி அதன் வாயிலாகவே உணர்கின்றோம். இடவுணர்வு இத் தொடுபுலனால் ஏற்படுவதன்றோ. சுடுபுலனும் குளிர்புலனும் அத்துணைச் சிறந்தனவல்ல. நமது துய்த்துணர்வைப் பலநிறக் கலவையாக்குவதற்கே அவை பயன்படுகின்றன.

நொப்புலன் என்பதற்குத் தனியான புகுவாய் இல்லை. தோலருகே முடியும் நரம்புகளை நேரே தூண்டல்கள் தாக்கியபோது நோவெடுக்கின்றது. இக்கிளர்ச்சி முனையிலுள்ள நோவெல்லையில் சென்று முடிகின்றது. நோவானது தனியாக எழுவதில்லை. வேறு புலன்களோடு சேர்ந்தே எழுகின்றது. மிகவும் சுட்டாலும், மிகவும் குளிர்ந்தாலும், மிகவும் உறுத்தினாலும் நோவெடுக்கின்றது. சுடுபுலப் புகுவாய் முதலியவற்றில் தூண்டல் தாக்கியபோது, அப்புகுவாய்கள் கொள்ளமுடியாது மிகுந்த கிளர்ச்சி சுற்றிலும் பரவித் தனியேகிடக்கும் நரம்புகளைத் தாக்குகின்றது. அதனால் நோவெடுக்கின்றது. ஆகவே, நோவுகள் அவை எழும் இடத்தாலும், நீடிக்கும் கால அளவாலும், பரவும் இடவளவாலும் உடன் எழும் புலன்களாலும் வேறுபட்டுப் பலபெயர் பெறுகின்றன. கீறுதல், குத்தல், வெட்டு, கடி, புண், என்பன தொடுபுல

வகையால் பெயர்பெற்ற நோவுகள். சுடுபுண் என்பது சுடுபுலவகையால் பெயர்பெற்ற நோவு. வயிற்றுநோய் குடர்நோய் என்பன அவை எழும் இடவகையால் பெயர்பெற்றன. சுளுக்கு, தசையிறுக்கம் என்பன தசைப்புலன்வகையால் பெயர்பெற்றன.

இப்புலன் துன்பமாகவே விளங்குகிறது. இதன் சிறப்பியல்புகளைப் பிரித்தறிவது அருமையினும் அருமை. கண்ணோய்க்கும், தோல்மேல் உள்ள புண்ணோய்க்கும் வேற்றுமை தோன்றுகிறது. ஆனால் அவ்வேற்றுமை நொப்புல வேற்றுமை யன்று; அதனோடெழும் தொடுபுலன் தசைப்புலன் இவற்றின் வேற்றுமையேயாகும். சுறீலெனக் குத்தும் நோவிற்கும் பரந்து மழுங்கலான நோவிற்கும் உள்ள வேற்றுமையும் நொப்புல வேற்றுமையன்று. குத்தல் எடுக்கும் நோவில், சில நரம்புகளில் நோவு ஒருமுகப்படுகின்றது; பரந்தநோவில், பலநரம்புகளிலும் கிளர்ச்சி பரவுகின்றது. துடிக்கும் நோவிற்கும், நீண்ட நாளாய்த் தொடர்ந்துவரும் நோவிற்குமுள்ள வேற்றுமை காலத்தால் எழுந்த வேற்றுமையே யாகும். மீந்தோல்மேல் எழும் நோவுகள் கண்மின்னிப்போவதுபோல நோகின்றன. உள்ளுறுப்பில் எழுவனவோ, எங்கோ தொலையில் எழுவனபோல மங்கலாகத் தோன்றுகின்றன.

நோவு மனத்துக்குப் பிடிக்காமற் போனாலும், மற்றைய புலன்களைப்போலப் பெரும்பயனைத் தருவதொன்றேயாம். ஒருவகையால் நோக்குமிடத்து இந்நொப்புலன், அவற்றினும் சிறந்ததொன்றேயாம். நமக்கு வரும் தீங்கினை முன்னாக அறிவித்து, அத்தீங்கைப் போக்கிக்கொள்ள நம்மை ஊக்குவது இந்த நொப்புலன் அல்லவா. ஈதில்லையானால் தீங்கினை எவ்வாறு அறிவோம்; தீங்கையறியாதபோது அதனின்றும் எவ்வாறு தப்பிப் பிழைப்போம். உயர்நிலையடைந்த உயிர்கள் (உயிருள்ளன) இடையே இந்நொபுலன் தலைசிறந்து விளங்குகின்றது. இதனாலேயே இதன் இன்றியமையாச்சிறப்பு நன்கு தெளிவாகின்றதல்லவா.

உட்புலன்கள் என்று உள்ளிருக்கும் உறுப்புக்களுள் எழும் புலன்களை வேறுபிரித்துப் பலர் ஆராய்கின்றனர். நொப்புலன் ஒருவகையில் உட்புலனேயாகும். பசி, நீர்வேட்கை, முதலியவும் புலனாகின்றன. வெறும் வயிறாக இருக்கையில் இரைப்பையின் பிசைதல் புலனாகின்றது; உணவுவேட்கை எழுவதும் புலனாகின்றது; பட்டினியினால்எழும் சோர்வும் புலனாகின்றது. இவையெல்லாம் வயிற்றுப் புலன்கள். குரல்வளையில் உள்ள ஈழைத்தோல் (Mucus membrane) உலர்ந்துபோவதால் நீர்வேட்கை எழுகின்றது. அவ் வீழைத்தோலில் புலர்தல் புலனாயபோது நீர்வேட்கை எழுகின்றது எனப் பேசுகின்றோம். சிறுநீர் விடுதல், எருவிடுதல் முதலியவும் புலனாகின்றன. மெய்ப்பாடு எழும்போது குலையில் ஏற்படும் மாறுபாடுகளும் புலனாகின்றன. குருதியோட்டம், உயிர்ப்பு முதலியனவும் புலனாகின்றன. இவ்வாறு ஒவ்வொரு உறுப்பின் நிலையும் புலனாகின்றது. இவற்றையெல்லாம் வேறுபிரித்தறிய முடியாமையால், இவற்றை உணர்ச்சி (Feeling) என்ற அளவில் அறிகின்றோம். இன்பம் துன்பம் அல்லது மலர்ச்சி வாட்டம் அல்லது ஆறுதல் ஆறாமை என இரண்டுவகையாக இவ்வுணர்ச்சி விளங்குகின்றது. "உடம்பு நன்றாக இருக்கின்றது; உடம்பு ஏதோபோல் இருக்கிறது. சோர்வாக இருக்கிறது, சுறுசுறுப்பாக இருக்கிறது. இளைப்பாக இருக்கிறது: களைப்பாக இருக்கிறது. சோம்பலாக இருக்கிறது, என்று பேசும்போது உடனிலை முழுவதையும் குறித்துப்பேசுகின்றோம். இப் பொதுப்புலனே பின் பலவகைப் புலன்களாயிற்று-

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 3. கைகேசி சூழ்வினைப் படலம்.

[174-வது பக்கத் தொடர்ச்சி]

வேற்றுமை வெளியே நிற்க
விபரீதம் யாது மின்றே.

ஆற்றவும் ஆற்றுவர் சிறிதிடையே கோபம் மூட்டவும் மூட்டுவர் கம்பர். கைகேசியின் கொடுமையினின்று நம் மனத்தை மறக்கவைப்பான் வேண்டிக் கன்னியர் கனவிலும் ஊடிய பாயலிலும் அமர்ந்தவோர் அயோத்தியைக் காட்டிவருங்கால் மீண்டும் நம் சிந்தையை மூண்டெழு சினத்தோடு அவள் செய்கையுள் செலுத்துமாறு,

> தூப முற்றிய காரி ருட்பகை
> தள்ளி யோடிட வுள்ளெழுந்
> தீப முற்றவு நீர்த்த கன்றெனச்
> சேய தாருயிர் தேய்தலாற்
> பாப முற்றிய பேதை செய்த
> பகைத்தி றத்தினில் வெய்யவன்
> கோப முற்றி மிகச்சி வந்தனன்
> ஒத்த னன்குண குன்றிலே.

[புகைபோன்ற அடர்ந்த கரிய இருளென்னும் பகை தள்ளி ஓடிவிடும்படி, உதயமான சூரியன், மாளிகையின் கண் எரிந்த விளக்குக்கள் ஒளிமழுங்கிப்போவது போலவே தன் குலப்புதல்வனான தயரதனது அருமையான உயிர் தேய்வதால்,. அவ்வாறு செய்த பாவம்முதிர்ந்த கைகேசியின் பகைத்தொழிலிற்கு ஆற்றாது மிகவும் கோபங்கொண்டு சிவந்தவன்போல் உதயகிரியில் தோன்றினான்]

என்னச் சூரியோதயத்தை வருணிப்பதைத் தருணமாகக் கொண்டனர். குணமென்னுங் குன்றேறி நின்றார் அந்தணராயினாற்றான் அவர் வெகுளியைக் கணமேயுங் காத்தலரிதுபோலும். இங்குக் குணக்குன்றிலே நின்று சினந்தவன் வெய்யவனாதலின் கைகேசிக்கு அவ் வெகுளியால் யாதும் தீது நேர்ந்திலது என நினைத்தல் வேண்டும். தீபத்தின் ஒளிபோல் தயரதன் உயிர்நிலை தேய்ந்துமாய அவ்வாறு தேய்ந்து மாய்க்குமொரு பாபமுற்றிய கைகேசியைச் சூரியன் கோபமும் தீண்டாமல் போயிற்றென்றால் அவள்பால் உற்ற வெறுப்புப் பின்னுமோர்படி அதிகமா யடர்வதாகும் என்பதில் ஐயமில்லை.

கைகேசி செய்துவைத்த பகைத்திறத்தைத் தெரிந்தவர்தாம் கதிரோன் சிவந்ததில் கோபக்குறி காண்பரே

யல்லாமல் ஏனையோர் அச் சிவப்பினை இயற்கையே என்று ஏற்றுக்கொண்டிருப்பார். ஏனெனில், முடிபுனை திருநாள் இன்றைப்போல் முன் இராமனது கடிமணத் திருநாள் அன்றும்,

அஞ்சன வொளியானு மலர்மிசை யுறைவாளும்
எஞ்சலின் மணநாளைப் புணர்குவ ரெனலோடும்
செஞ்சுட ரிருள்கீறித் தினகர னொருதேர்மேல்
மஞ்சனை யணிகோலங் காணிய வெனவந்தான்

[மைபோன்ற நிறமுடையவனும் தாமரையில் வசிப்பவளும் நாளைக்கு மாசற்ற மணம்புகுவார் என்பதைக் கேட்டதும், சூரியன் சிவந்த தன் கிரணங்களால் இருளைக் கீறிக்கொண்டு, தன் மைந்தனது அழகிய மணக்கோலத்தைக் காண வருவான்போல் ஒரு தேரின்மீது வந்தான்]

ஆதலின் சிவப்புறத்தோன்றலே இக் கதிரவன் குணமென யாவரும் அறிந்திருப்பார். மங்கையரும் பங்கயங்களும் அன்று அச்சூரியன் சிவப்பில் யாதும் விபரீதங்கண்டதில்லை. எனவே,

மூவ ராய்முத லாகி மூலம
தாகி ஞாலமு மாகியத்
தேவ தேவர் பிடித்த போர்வி
லொடித்த சேவகர் சேணிலங்
காவன் மாமுடி சூடு பேரெழில்
காண லாமெனு மாசைகூர்
பாவை மார்முக மென்ன முன்ன
மலர்ந்த பங்கய ராசியே

[மும்மூர்த்திகளாய், அவர்களுக்கு முதலாகி, எல்லாவற்றிற்கும் மூலமாய், உலகுமாகி, தேவர்களுக்குத் தேவனை அச்சிவபிரான் பிடித்த போர்வில்லை ஒடித்த வீரன், பெரிய பூமியைக் காத்தற்குப் பெரிய கிரீடத்தை அணிந்துகொள்ளும் மிக்கஅழகைக் காணலாம் என்னும் ஆசைமிகுந்த மாதருடைய முகம்போல் தாமரைமலர்கள் மலர்ந்தன]

என்று எதிர்நிலையணியால் பாவையரோடு பங்கயங்களை உவமையிற் பிணித்துப் பேசுகின்றவராயினார் இப் புலவர்பிரான். இவ்வண்ணம், இராமபட்டாபிடேகத்தைக் காணுமோர் ஆசையால் பொலிவு மிக்க மாதரார் முகம்போல் அற்றைநாள் தாமரைகள் மலர்ந்தன என்பதில், எதிர்நிலையுவமம் ஒன்று இழைத்தது மாத்திரமன்றிப் பின்வரும் ஒரு பயனையும் கருத்துட்கொண்டு கம்பர் இது இயம்பினார் என நினைத்தலுங் கூடும். ஏனெனில், கானத்துட்போக்கிய கைகேசியின் வாய்மொழியைக் கேட்ட இராமனது திருமுகச் செவ்வி,

ஒப்பதே முன்புபின்பு வாசக முணரக் கேட்ட
வப்பொழு தலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா

என்ற வியப்பு இயற்கையாகின்றது. தன் மாமுடி சூடு பேரெழில் காணலாம் எனும் ஆசைகூர்ந்த பாவைமார் முகம்போல் அப்பொழுது (அன்றைய தினம்) அலர்ந்த செந்தாமரையை, தான் முடி சூடுவதில்லை என்பதைக் கேட்ட இராமனது முகம் பொலிவினால் வென்றது என்னும் பொருள் இவ்விரு செய்யுள்களாலும் இனிது நடக்கின்றது.

இவ்வண்ணம் பொழுது புலரும் அந்நாளில் அயோத்திமாநகரம் ஆர்வமுடன் அணிகோலங்கொண்டு திகழ்ந்த விதங்களைக் கம்பர் இனிச் சில பாசுரங்களில் பாராட்டுவாராகின்றார்:—

குஞ்சர மனையார் சிந்தைகொ ளினையார்
பஞ்சினை யணிவார் பால்வளை தெரிவா
ரஞ்சன மெனவா ளம்புக ளிடையே
நஞ்சினை யிடுவார் நாண்மலர் புனைவார்

[யானைபோன்ற மைந்தர்களது மனத்தினைத் தம்வயமாக்கிக்கொண்ட மாதர், கால்களுக்குச் செம்பஞ்சிக் குழம்பூட்டிக்கொள்வார்; பால்போலும் வெண்மையான வளையல்களைத் தெரிந்தெடுத்துத் தம் கைகளில் அணிந்துகொள்வார்; வாள்போன்றும் அம்புபோன்றும் இருக்கிறதம் கண்களின் இடையே மையிடுதல் எனச்சொல்லி விஷத்தை இட்டுக் கொள்வார்; புதிய மலர்களைச் சூடிக்கொள்வார்]

இதற்குமுன் எழுசீரிலும் இதற்குப்பின் அறுசீரிலும் ஆசிரியவிருத்தங்கள் அமைந்திருக்க, கோலம் புனைந்துகொள்ளும் மங்கையர்தம் விரைவினைக் காட்டுமாறு இப்பாட்டு ஒன்றுமாத்திரம் இடையே கலிவிருத்தமாயமைவது கம்பர்தம் கவித்திறத்தில் புதுமையன்று. அயோத்தியின்கண் வைகிய பலதிறப்பட்ட மாந்தரின் செய்தியை இனிச் செப்புகின்றார்.

பொங்கிய உவகை வெள்ளம்
பொழிதரக் கமலம் பூத்த
சங்கையின் முகத்தார் நம்பி
தம்பிய ரனைய ரானார்
செங்கய னறவ மாந்திக்
களிப்பெனச் சிவக்குங் கண்ணார்
குங்குமச் சுவடு நீங்காக்
குலவுத்தோட் குமர ரெல்லாம்.

[பொங்கிய உவகையின் வெள்ளமானது பெருகும்படி தாமரை போன்று மலர்ந்த களங்கமற்ற முகத்தையும், சிவந்த கயலானது மதுவை அருந்திக் களித்திருப்பதுபோல் சிவந்தகண்களையும் உடைய மாதர்களது குங்குமத்தின் அடையாளம் மறையாத திரண்ட தோள்களையுடைய வாலிபர் அனைவரும் இராமனது தம்பியரை ஒத்தவர்களானார்.]

இது இளையரோடு இணங்கிய குமரர்தம் செய்தியே யாதல்வேண்டும். அன்னார் திலதமாய்த் தீட்டிய குங்குமம் காளையர் தம் தோள்களில் சுவடிடப்படிந்த பெற்றி இது. எனினும் குமரரது குவவுத் தோள்கள் சிவப்பதற்குக்காரணம் இதுவொன்றேயாய் இருத்தல் வேண்டும் என்னும் நியதியில்லை. முன் அயோத்திநகரச் சிறப்பை இயம்புங்கால்,

குதைவரிச் சிலைநுதற் கொவ்வை வாய்ச்சியர்
பதயுகத் தொழில்கொடு பழிப்பி லாதன
ததைமலர்த் தாமரை யன்ன தாளினால்
உதைபடச் சிவப்பன வரவுத் தோள்களே

[குதையையுடைய கட்டமைந்த வில்லைப்போன்ற நெற்றியையும், கொவ்வைக்கனிபோன்ற வாயையும்உடைய மாதர், செம்பஞ்சி யூட்டல் முதலிய கோலங்கள் செய்யப்பெற்றுப் பழிப்பில்லாத இதழ்கள் அடர்ந்த தாமரை போன்ற தம் பாதங்களால் உதைக்க, ஆடவர்களது வலியமைந்த தோள்கள் சிவந்தன]

எனக் காட்டியதிலிருந்து பிணங்கிய காலத்தும் குலவுத் தோள்கள் சிவத்தற்கியலும்என்பதுதெரிகின்றது. ஊடினுங் கூடினும் தமதுஇலச்சினையைப் பொறித்தே நாயகரைத் திரிதரப் போக்குகின்ற மாதரார் பேதையராகார். அச்சுவட்டினை அழிக்காது வீறணிந்து நடமாடும் ஆடவர்தாம் வீரர்போலும்—ஆண்பாலாரே பெண்பாலாரோ டடைவம்மா !

இராமனுக்குப் பருவத்தால் இளையராய அயோத்தி மைந்தர்தம் பெற்றியிதுவாக,

மாதர்கள் கற்பின் மிக்கார்
கோசலை மனத்தை யொத்தார்
வேதியர் வசிட்ட னொத்தார்
வேறுள மகளி ரெல்லாம்
சீதையை யொத்தா ரன்ன
திருவினை யொத்தா ளவ்வூர்ச்
சாதுகை மாந்த ரெல்லாந்
தயரதன் றன்னை யொத்தார்

[கற்பின் மிகுந்த மாதர்கள் கோசலையின் மனத்தை ஒத்தார். அந்தணர்கள் வசிட்டனை ஒத்தனர். வேறாக உள்ள மகளிர் எல்லாம் சீதையை ஒத்தனர். அச்சீதையும் திருமகளை ஒத்தனள். சிலமுடைய மாந்தரெல்லாம் தயரதனை ஒத்தார்]

கம்பராமாயண ஆராய்ச்சியாளருள், ஈதே இதற்குப் பொருள் என எதிர்வழக்கிட நிற்கின்ற சிற்சில தொடர்களில் 'சாதுகை மாந்தர்' என்பது மொன்றாயினும், மெய்கண்டவுரை இதுவே என இயம்பலாற்றா அச்சுழற்சியுள் படுதலின்றி, உரை எளியதேனும் பொருள் அரியதாய் இச்செய்யுளில் கிடக்கும் மற்றோர் ஒப்புமையை உணர்தல் வேண்டும். கற்புடைய மாதரும் வேதியரும் வேறுளமகளிரும் சீதையும், முறையே கோசலையையும் வசிட்டனையும் சீதையையும் திருவினையும் எப்பான்மையில் ஒத்தனர் என்பதை இங்குக் கம்பர் இயம்பினாரல்லர். மகிழ்ச்சியில் ஒத்தனர் எனப் பொதுவுற நினைப்பதற்கில்லை. தயரதன் இப்பொழுது மாழ்குகின்றானன்றி மகிழ்வானல்லன். ஆதலின், சாதுகை மாந்தர், அவர் எவரேயாயினும், தயரதனை ஒத்திருப்பது மகிழ்ச்சியா லென்னல் இயலாது. மும்மையும் உணர்ந்த வசிட்டனும்,

பாக்கி யம்மெனக் குளதென நினைவுறும் பான்மை
போக்கி நிற்கிது பொருளென வுணர்கிலென் புவன
மாக்கி மற்றவை யகிலமு மணிவயிற் றடக்கிக்
காக்கு நீயொரு வேள்விகாத் தனையெனுங் கருத்தே

என முன் உன்னிய கோசிகமுனிவனைப்போல், இராமனுக்கு இவ்வயோத்திபரசு ஒருபொருளெனப் பெரிதும் மகிழ்ந்து பாராட்டியிருக்கமாட்டான். சீதையும் அவளுக் கொப்பாய திருமகளும் இவ்வாறே மகிழ்தற்குரியதோர் புதிய பேற்றினை இம் மகுடாபிடேகத்தில் கண்டிரார். சிறக்கும் தன் மகற்குச்செல்வம் எனச் சிறிது உவக்கின்ற சிந்தையளாயினும் கோசலை துறக்கும் மன்னவன் என்னுந் துணுக்கமே மீதூரப்பெற்ற மனத்தவளாயினாள். ஆதலின் அவரவர் ஒத்த தன்மை வேறுவேறாதல் வேண்டும். அதனை அவரவர்களுக்கு ஏற்றபெற்றி அமைத்துக்கொள்வதும் எளியதே. எனினும் எளிதாக நில்லாத தொன்று இதன் கண் உளது. மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலையை ஒத்தார் எனச் சாற்றிவிட்டுப் பிறகு வேறுள மகளிர் சீதையை ஒத்தார் என்பதன்கண் துண்ணென வோர் விபரீதந் தோன்றுகின்றது. கற்புடைய மகளிரைக் கோசலைக்கு நிகராக்கியபின், வேறுள மகளிர் எனப்பிரித்து ஓதும் இவ்வாசகம் கற்பிலா மகளிரையே குறித்தல்வேண்டும். அன்னார் சீதையை ஒத்தார் என்னலாமோ! சீதைக்கு இது அடுக்குமா என்பதோடு நில்லாது அவளை ஒத்த திருமகளுக்கு அடுக்குமோவென அஞ்சுவதும் இயற்கையே.

கம்ப சூத்திரமென்று கழறுதற்குரிய வொரு பாசுரம் போலும் இது. "அப்பொழுதலர்ந்த செந்தாமரையை வென்ற தம்மா" என்றதில் யாதுஞ் சூத்திரமில்லைபோற் றோன்றினும் ஊன்றி நோக்குமிடத்து அது முன்வந்த ஓர் பாடலைத் தழுவியபரிசு உணர்ந்தாலன்றி நயமிலாது கழியலாவதைக் கண்டோம். இந்தச் செய்யுளின் சூத்திரம் வேறுள மகளிரில் வைக்கப் பெற்றிருக்கின்றது. அதனை அவிழ்க்கும் முறையைத் திருக்குறளின் பரிமேலழகர் உரையினுள் ஒருவாறு காணலாம். காமத்துப்பாலிற்குத் தோற்றுவாய் வரையுங்கால் அவ்வுரையாசிரியர், "காமவின்பம் …………புணர்ச்சி பிரிவு என இருவகைப்படும் ; இனி அவைதம்மையே தமிழ் நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக் களவென்றும் பிரிவைக் கற்பென்றும் பெரும்பான்மைபற்றி வகுத்துக்……………கூறுகின்றனர்" எனக் காட்டுமிடத்து 'வேறுள மகளிர்' ஆவதற்குக் கற்பிலாமையன்றி வேறோர் இலக்கணம் தோன்றி நிற்கின்றது. பிரிந்திருக்கும் நிலையைக் கற்பெனுஞ் சொல் உணர்த்திக்கொள்ளுமாதலின், "மாதர்கள் கற்பின் மிக்கார்" என்பது தங்கள் நாயகர்களுக்கு அயலிலிருக்காத மாதர்களைக் காட்டலாம். கைகேசி அயோத்தியினுள் கால்வைத்த நாள் முதல் கோசலை, தசரதனோடு ஓரகத்திருப்பினும் அவனின்று பிரிந்தவள் போன்றதோர் நிலையே எய்தி வைகினாள் என்பது வால்மீகத்தில் வெளிப்படை. கம்பர் நூலிலும், இராமனது பட்டாபிடேகத்தைப் பற்றி மங்கையர்வாய் கேட்ட கோசலை, மன்னவன்பால் சென்று தன் மகிழ்வையளித்து உவகைவினவுதல் இன்றி, கதியற்றவர்க்குத் தெய்வமேதுணை யென்னும் பான்மையில், திருக்கோயில் புக்கு வணங்கி, "என் வயின்தரு மைந்தற்கு இனி அருள் உன்வயத்தது என்று கையடை தந்து வேண்டினாள் என்னும்செய்தி அவளது பிரிவுநிலையையே காட்டுகின்றது. பிரிவின் மிக்க இக்கோசலையைத் தமிழ்நூல்களோடும் பொருந்தக் கற்பின்மிக்கவள் எனக்கழறலாம். கம்பர் இப்பொருளில் உரைக்காது, 'கொண்டானைப் பிழையாமை' என்னுங் கருத்தில் கற்பென்பதைப் பயின்றிருப்பாரானாற்றான் 'வேறுள மகளிர்' எனப் பின்வருவது விபரீதத்தில் கொண்டு சேர்க்கும். கோசலையைப்போல் பிரிவுநிலையில் இருக்கும் மாதர், இராமன் முடிசூடநின்ற அந்நாளைத் தத்தம் புத்திரர்களுக்கே முடிசூடும் நாளென்றே பாராட்டினர் என்றும், வேறுள மகளிர் என்பது இதற்கெதிர், தங்கள் நாயகர்களோடு கூடிவாழும் மாதர்களைக் குறிக்குமாதலின், அன்னார் சீதையைப்போல் தத்தம் நாயகருக்கே முடிசூடும் நாளாக அந்நன்னாளைக் கருதினர் என்றும், பொருள் செய்துகொள்வதே வேறு உரை தெரியும்வரையில் தக்கதாகும்.

நோயற்ற : : : : வாழ்வே

ஆரோக்கிய வாழ்க்கைக்கேற்ற இரு அருமருந்துகள்

குறைவற்ற : : செல்வம்

"ஸித்தகல்ப மகரத்துஜம்"

(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளை நீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம்மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்ருத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபக சக்தி பெறவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூபா **10**

"மஹா சந்தனாதித் தைலம்"

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபக சக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி, கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக் கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும் பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா **5**.

உங்கள் நரம்புகளையும், தேகத்தையும் பலப்படுத்தவும், ஞாபக சக்தியைப் பெறவும், நோய்களிலிருந்துவிடுதலையடைந்து ஆரோக்கிய சுயராஜ்யத்தைப் பெறவும் சுலபமான வழி,

ஆயுர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் N. V. ஸ்ரீ ராமாசார்லு அவர்களின்

இணையற்ற ஔஷதங்களிலேயே இருக்கின்றது. அவைகளை உபயோகித்து இன்ப வாழ்வு நடத்தச் சிறிதுந் தயங்காதீர்கள்.

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட் சென்னை.

தபால் பெட்டி 151, சென்னை. கேட்லாக் இனம். தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A..B.L. ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

இனம்! இனம்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷந்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,

1/94, சைனு பஜார், மதராஸ்.

விஜய ரக்ஷித கவசம்.

இது ஓர் மஹானின் மந்திர உபதேசத்தினலும், ஓர் அபூர்வ மூலிகையினலும் தயாரிக்கப் படுகிறது. இதை அணிபவர்கள் கிரகதோஷம் முதலிய பல துன்பங்களிலிருந்து விடுபடுவதும் தவிர, எவ்வித காரியங்களிலும் வெற்றியடைந்து, ஆரோக்யம், சந்தானம், ஐஸ்வர்யம், தெய்வானுக்கிரகம், மனநிம்மதி இவைகளைப் பெறுகிறார்களென்பதை அனுபவத்தாலறியலாம். வெள்ளிக் கவசம் ரூ 5. தங்கம் ரூ. 15.

விலாசம் :—புரபஸர். கா. கோவிந்தாச்சார்,

மெஜிஷன் &மெஸ் மெரிஸ்ட், 218, தங்கசாலை, மதராஸ்.

Estd. NATIONAL **1906**

INSURANCE COMPANY LIMITED.

***Head Office:*-9, Old Court House St., Calcutta.**

Before taking out a life assurance policy it is better to apply all the rigid tests for a good company.

The "National" will surpass any other Company in these tests.

(1) Indian Capital-Indian Management-for the benefit of Indians.

(2) The Company has never contested a claim on a technicality.

(3) The low safe rates of premium provide maximum assurance at minimum cost.

The "National" keeps well ahead of the times and its policy of 'fair and square dealing' which began with its founding, ever since 1906, has been continuous.

For Particulars & Agency terms.

Apply to :— R. G. DAS & CO., *Managers.*

T. ANANTACHARI, B.A.,

Branch Secretary.

NATIONAL INSURANCE COMPANY LTD.,

Madras Branch, 113, Armenian Street, G. T., Madras.

HAIL & CO

HALFTONE & LINE BLOCK MAKERS

THE BEST & FINEST HOUSE for HALFTONE & LINE BLOCKS On COPPER & ZINC.

CINEMA SLIDES AND DESIGNS IS A SPECIALITY.

285. CHINA BAZAR ROAD.. Opposite Telephone House MADRAS.

Write for Particulars.

Agents Wanted Eevery - where.

— லோத்ரா —

ஸ்திரீகளுக்கு

மகிழ்ச்சியையும்

ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —

ஜுரத்தைப் போக்கும்

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.

எழும்பூர். : : : : சென்னை.

அசோகா சால்ட்

(ரிஜிஸ்டர்ட்)

(அசோகா உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுக்கவும் அசோகா உப்பு ஓர் அரிய மருந்து.

உணவை நன்ருகச் செரிக்கச்செய்து யாதொரு வருத்தமின்றி நாள்தோறும் மலத்தைக்கழிக்கும் சிறந்த குணமுடையது.

அஜீர்ணம், பித்தவாயு, புளி ஏப்பம், குலை எரிச்சல், வயிற்றுவலி, குன்மம், மார்புவலி, இடுப்புநோய், தலைமயக்கம் முதலிய நோய்களை நீக்க வல்லது. பாண்டு, சோகை, காமாலை, ஜுரம், மகோதரம், அஜீர்ணம், பேதி, கணைச்சூடு, வெட்டைச்சூடு, மூலம், கரப்பான், சிரங்கு, குடல் கிருமி, மலச்சிக்கல், போன்ற நோய்களைப்போக்கி எவ்விதப் பிணியும் அணுகாமல் காக்கக்கூடியது அசோகா உப்பே யாகும்.

விலை ரூ **1-8-0** தபால்செலவு வேறு.

அசோகா கம்பெனி,

லிமிடெட், சென்னை.

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம் வாசனைகளால் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி-வீசை ரூ-4. ஸைசாதா ரகம்பொடி வீசை ரூபா $3\frac{1}{2}$.

டாக்டர் B. S. மல்லையா M. B., & C.M., & M.L C. அவர்கள் பரிசோதித்த

R.S. சுகந்த மூக்குத்தூள் விலை பாட்டில் 1-க்குஅணு 4. டஜன் ரூபா $2\frac{1}{4}$ ஸை ஒரு சேர்டின் ரூபா $1\frac{3}{4}$ வி பி. ரயில் சார்ஜ் வேறு.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,

நெ.44 கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

தந்தி விலாசம் "நஸ்மம்"

கலா நிலயம்

1930 ஆண்டு பைண்ட் வால்யூம் மிகச் சிலவே இருக்கின்றன.

1928-வது ஆண்டு இதழ்களை வாங்குவார்க்கன்றி 1929 ஆண்டு இதழ்கள் மாத்திரம் கொடுப்பதற்கியலாது. அவைகளும், இன்னும் பத்துப் புத்தகங்களே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவின் வருக.

விலை:—(தாபால் செலவு உள்பட) வால்யூம் ஒன்றிற்கு.

	உள்நாடு	வெளிநாடு
பைண்ட் செய்யாதது	ரூ. 8-0-0	ரூ. 9-8-0
காலிகோ கில்ட்	9-8-0	11-0-0
ஆப்லெதர் கில்ட்	10-0-0	11-8-0

முன் பணம் அனுப்புவதே உத்தமம்.

கலாநிலயம் ஆபீஸ்—புரசைபாக்கம், சென்னை.

33 வருஷங்களாக உலகப்பிரசித்தி பெற்றுவரும்

வைத்ய ரத்ன பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின்

ஜீவாமிருதம் (ரிஜிஸ்டர்ட்)

இதைத் தினந்தோறும் போஜனத்தின் பின் இரண்டுதரம், முறைப்படி சாப்பிட்டுவந்தால், பலஹீனம், மலபந்தம், தலைவலி, நரம்புத்தளர்ச்சி, ரத்தமின்மை, ரக்த சோகை, அஜீர்ணம், ஆமாசம், மனச்சோர்வு, ஞாபகமின்மை, தூக்கமின்மை, பசியின்மை முதலியவைகளைப் போக்கி, சரீரத்தில் மிகுந்த சுத்த ரக்த ஓட்டத்தையும், மிகுந்த வலிவையும், நிறைந்த ஆரோக்கியத்தையுங் கொடுத்து வாழ்க்கையை இன்பமுறச் செய்வதுடன் தசைகளை வலுப்படுத்தி, வீர்யத்தை பெருகச் செய்கின்றது.

கேட்லாக் இனம்.] விலை புட்டி 1-க்கு ரூ. 3-4-0. எல்லாவிடங்களிலும் கிடைக்கும். [ஏஜண்டுகள் தேவை.

ஆயுர்வேதாஸ்ரமம், 151, கோவிந்தப்பநாய்க்கன் வீதி, தபாற் பெட்டி நெ. 287, மதராஸ்.

(1898-ல் ஸ்தாபிக்கப்பட்டது.)

டெலிபோன் நெ. 2191. தந்தி விலாசம், "பண்டிட்"

அருமையான பொடி! 32 தங்கமெடல்கள் பரிசுபெற்ற உடனே ஆர்டர் செய்யுங்கள்!!

பட்டணம் பொடிக்களஞ்சியம் பட்டணம்பொடி

காரம், மணம், குணம், சுகம், நிறம், வாடை இவை ஆறும் அமைந்துள்ளது.
விலை விபரத்திற்கு எழுதுக.

பட்டணம் பொடிக்களஞ்சியம்,
147, கோவிந்தப்ப நாயகன் தெரு, மதராஸ்.

தபால் பெட்டி, நெ:—156

புரோப்ரைடர்:— ஷண்முக முதலியார் பௌத்திரர்,
R. K. ஜெயராம் முதலியார்.

சமையல் - -
சுகம் - -
வேண்டுமானால்
ருக்மணி
குக்கர்
வேண்டும்

இது நாடறிந்த விஷயம். அனுபவசாலிகள் தம் செயலைப் பின்பற்றி நீங்களும் ஒரு அடுக்கு வாங்குங்கள்.

1, 2, 4, 6, 8, 12, 16 பேர்களுக்குரிய ஏழு அடுக்குகள் ரூ. 12, 16, 20, 25, 31, 37, 44.
விபர புத்தகம் இனம்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
இராயப்புரம் (12) சென்னை.

நம்பிக்கையுள்ள - - - ஔஷதம்

அஜீரணம், மலச்சிக்கல், தேக அசதி, ஞாபகக்குறைவு, நரம்புகளின் தளர்ச்சி முதலிய வியாதிகளுக்கு எங்கள்

ஆதங்க நிக்ரஹ
மாத்திரைகள்

நம்பிக்கையுள்ள ஔஷதம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துக் குணத்தை யடைந்திருக்கிறார்கள். நீங்களும் உபயோகித்துக் குணத்தை யடையுங்கள்.

32-மாத்திரைகளடங்கிய
டப்பி 1-க்கு விலை ரூ. 1

கேட்லாக் இனம்!

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
சென்னை.

வித்வான் த. சண்முக கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

உயர்ந்ததும், சிறந்ததுமான மூக்குக் கண்ணாடிகள் வாங்குவதற்கு உத்தரவாத முள்ள இடம்இதுவே.

விலைகள் சரசம், புதுமாதிரியான கண்ணாடிகள் எப்பொழுதும் கைவச மிருக்கின்றன. மாணவர்களுக்கு ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும். விலை விபரத்திற்கு எழுதுக.

எம். ஏ. சாரி அண்டு கோ., மூக்குக்கண்ணாடி வியாபாரிகள், நெ. 9. பிராட்வே, சென்னை.

வர்த்தமானம்

சென்னைநகரில் சாத்விகமுறையில் அன்னிய ஆடை பகிஷ்காரம் நடந்து வருகின்றது. போலீசார் இப்பொழுது இதனில் தலையிடுவதில்லை.

***

சட்டமறுப்பு இயக்கசம்பந்தமாய்ச் சிறைபனுப்பப்பெற்றவர்களில் பெரும்பான்மையோர் விடுதலைபடைந்தனர். சீக்கிரத்தில் மற்றவர்களும் விடுவிக்கப் பெறலாம். ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி ஐயர் விடுதலை பெற்றார்.

***

'மாரிஸ்' காரின் சொந்தக்காரரான சர் வில்லியம் மாரிஸ் என்பவர் கூடிய விரைவில் ஓர் புதிய மாடல் மோட்டார்கார் 100 பவுன் விலையில் வெளியிட நிச்சயித்துள்ளார். அந்தக் கார் தற்பொழுதுள்ள சிறு கார்கள் யாவற்றையும் விடப் பெரிதாகவே இருக்குமாம். அதற்கு மூன்று ஸ்பீடும், நான்கு வீல் பிரேக்குகளும் வைக்கப்படும். ஒரு காலன் பெட்ரோலுக்கு 50 மைல் ஓடும். தற்பொழுதுள்ள மாரிஸ் இஞ்சின் மாடல்போலன்றி, ஓவர்ஹெட் வால்வுகளும் காம்ஷாப்ட்டும் வைப்பதற்குப் பதிலாகப் பக்கத்திலேயே வால்வுகள் வைக்கப்படும் என்றும் தெரிகிறது.

***

சென்றவாரம் தஞ்சை ஜில்லா போர்டின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் போர்டு அங்கத்தினர் தொகை 52 ஆக உயர்த்தவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. 4 ஸ்தானங்கள் முகம்மதியர்களுக்கும் 3 கிறிஸ்தவர்களுக்கும் 2 ஆதி திராவிடர்களுக்கும் ஒன்று ஸ்திரீகளுக்குமாக ஒதுக்கவும் முதற் செய்யப்பட்டது. பாக்கி 42 ஸ்தானங்களில் தஞ்சாவூர், பாபனாசம், மாயவரம், நன்னிலம், மன்னார்குடி, நாகப்பட்டணம், திருத்தருப்பூண்டி, பட்டுக்கோட்டை தாலூக்காக்கள் ஒவ்வொன்றுக்கும் 4ஸ்தானங்கள் வீதமும், கும்பகோணத்திற்கு 5-ம், சீர்காழிக்கு 3-ம், அறந்தாங்கிக்கு 2-மாக பிரிக்க ஒப்புக்கொள்ளப்பட்டது.

முகம்மதிய 4ஸ்தானங்களில் நன்னிலம், மாயவரம், பாபனாசம், நாகப்பட்டணம் இந்தத் தாலூக்காக்களுக்கு ஒவ்வொன்றும், கிறிஸ்தவர் 3ஸ்தானங்களைத் திருத்தருப்பூண்டி, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் தாலூக்காக்களாக ஒவ்வொன்றுக்கும் ஒன்று விகிதமும், ஆதிதிராவிட 2 ஸ்தானங்களுக்கு மன்னார்குடி, நன்னிலம் தாலூக்காக்கள் தொகுதிகளாகவும், ஸ்திரீத் தொகுதிக்கு நாகப்பட்டணத்தையும் ஒதுக்கி வைத்தனர் என்று ஒரு நிருபர் அறிவிக்கின்றனர்.

***

மார்ச்சுமாதம் 5-ந்தேதி கொழும்பிற்கு ஒரு அமெரிக்கமாது வந்துசேர்ந்தார். பத்திரிகை நிருபர் ஒருவர் அவரைக் கண்டு பே[illegible]லை அம்மாது கூறியதாவது:—

உலகத்தின் பெரும்பாகத்தைக் கால் நடையாகச் சுற்றியுள்ளேன். பணத்தையும், தக்க புருஷன் ஒருவனையும் பெறுவதற் கென்றே இந்த யாத்திரை செய்கின்றேன். ஐரோப்பா முழுதும் சுற்றிவிட்டேன். இதுவரையில் நான் கோரிப் புறப்பட்டதைப் பெறவில்லை. 1927-ம் [illegible] கனடாவைச் சேர்ந்த [illegible]ருந்து நானும், இன் [illegible] பெண்ணும் கால்நடை[illegible]ப் புறப்பட்டோம். சிறிதுகாலத்தில் எனக்கு உதவியாயிருந்தஅந்தப் பெண் கலியாண நோக்கத்தால், என்னை விட்டுப் பிரிந்தாள். நான், மெக்சிகோ, கொலம்பியா, அலஸ்கா, கலிவோர்னியா முதலிய விடங்களைத் தரிசித்தபின் நியூசிலண்ட், அவுஸ்திரேலியா, பிலிப்பையின்தீவு, ரொகியோ, பினங்கு, சிங்கப்பூர், சயம் முதலியவிடங்களுக்குப்போய்க்கொழும்பு வந்துசேர்ந்துள்ளேன்." இனிக் கண்டிக்குப் போய் அங்கிருந்து இந்தியா சென்று அவ்விடமிருந்து எகிப்து, முதலிய விடங்களுக்குப் போக எண்ணியிருப்பதாகவுங் கூறினாள்.

***

சத்தியாக்கிரஹ இயக்கத்தின் பயனுய்ச் சென்னையில் பொருளாதார நிலையில் ஏற்பட்ட நிலைமையைப் பற்றிச் சென்னை அரசாங்க ரெவின்னியு இலாக்காதார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

கடலை விபாபாரத்தில் மந்த நிலைமை யேற்பட்டிருப்பதைப்பற்றித் தெரிவித்துக்கொள்ளச் சென்னை எண்ணெய்வித்து ரயத்துவாரி சங்கங்களின் பிரதிநிதிகள் ஜனவரி 16-ந் தேதி கவர்னரைப் பேட்டி கண்டனர். அதன் பேரில் இம் மாகாணத்தில் கடலை விற்பனையைக் கூட்டுறவு முறையில் நடத்திவைக்க முடியுமாஎன்று ஆராய ஒருகமிட்டியை நியமிக்கக் கவர்ன்மெண்டார் முடிவு செய்தனர். அதோடு பொதுவான விலைக்குறைவுகளினால் மாகாணத்தில் ரயத்துகளின் பொருளாதார நிலைமை எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறதென்று ஆராய்ந்துகொண்டிருந்தனர். அதன்பேரில் முந்திய தீர்மானம் மாற்றப்பட்டுப் பொருளாதார மந்தத்தின் சில அம்சங்களைப் பற்றி விசாரித்தறிவிக்க உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தரல்லாதாரு மடங்கிய கமிட்டி ஒன்றை நியமிக்கத் தீர்மானித்திருக்கின்றனர். இப்போதுள்ள பொதுவான பொருளாதார மந்தத்தின் பலனை விசாரித்துச் சில சாமான்களைக் கூட்டுறவுமுறையில் விற்கவோ வேறு ஏற்பாடுகளோ செய்து அந்தக் கஷ்டத்தைக் குறைக்கவேண்டுமென்று கமிட்டி சிபார்சு செய்யும். கடலையும் இந்தப் பொருள்களில் ஒன்றாகும். சில பிரதேசங்களில் பாக்கிக்கிஸ்தி வசூலை ஒத்திவைத்து உதவியளிக்கவேண்டுமா என்பது தனியாக விசாரணையிலிருக்கிறது. அதை இக் கமிட்டி கவனிக்கக் கூடாது. கமிட்டி பின்கண்டவர்களடங்கியதாகவிருக்கும். (1) நிலவரிக் கமிஷனர் மிஸ்டர் எச். ஏ. பி. வர்ணன் (தலைவர்) (2) கைத்தொழில் டைரெக்டர் ஸ்ரீமான் ஏ. அப்பாதுரை பிள்ளை (3) விவசாய டைரெக்டர் மிஸ்டர் ஜி. ஆர் ஹில்ஸன் (4) கமிட்டி இலாகா சீப் கன்ஸர்வேட்டர் மிஸ்டர் ஆர். டி. ரிச்மண்டு (5) கூட்டுறவு ரிஜிஸ்டிரார் மிஸ்டர் டி. என். ஸ்டிராத்தி (6) தொழிற் கமிஷனர் மிஸ்டர் ஜே. கிரே (7) ஈஸ்டர்ன் பாங்கி மிஸ்டர் எச். எஸ். கார்ட்டர் (8) இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் மிஸ்டர் வி. டி பிரிஸ்ட்லே (9) ஸ்ரீமான் ஸா:பி வெங்கடாசலம் செட்டி (10) ஸ்ரீமான் எம். ஏ. முத்தையா செட்டியார் (11) அண்ணாமலை ஸர்வ கலாசாலை பொருளாதார சாஸ்திர ஆசிரியர் ஸ்ரீமான் டி. கே. துரைசாமி ஐயர், வேறு பல உரிமைகளின் பிரதிநிதிகளாக 10 உத்தியோகஸ்தரல்லாத மெம்பர்களிருப்பார்கள் மிஸ்டர் எச். எம். ஹூட் இதன் காரியதரிசியாக விருப்பார். கமிட்டி சென்னையில் கூடித் துரிதமாக யாதாஸ்தனுப்பவேண்டும்.

188108
188108

KALANILAYAM.
REG. NO. M. 2324.

ஆயுர்வேத வித்வான் V. B. பண்டிட், சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

சோல் ஏஜென்ட்ஸ்:-யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவலதா (Reg.)
ப்ருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:

SADVAIDYASALA NANJANGUD
THE UNITED CONCERN, MADRAS

டிப்போ, பம்பாய்
கல்கத்தா

NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA NANJANGUD

மதுரை
காஞ்சீபுரம்.

ஸ்ரீமத் உ. வே. பெருமாள்கோவில் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்
ஸ்வாமி அருளிய உரைப் புத்தகங்கள்.

முதலாயிரம்.

3-வால்யூம்களாககாலிகோபயிண்டு விலை ரூ.	10	0	0
முதலாயிரம் 6-வால்யூம்: திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி ,,	3	0	0
திருப்பாவை ,,	1	4	0
நாச்சியார் திருமொழி ,,	1	12	0
பெருமாள் திருமொழி ,,	1	8	0
திருச்சந்த விருத்தம் ,,	1	8	0
திருமாலை, திருப்பள்ளியெழுச்சி அமலனாதிபிரான், கண்ணி நுண் சிறுத்தாம்பு ,,	1	4	0

2-வது ஆயிரம்

பெரிய திருமொழி (1, 2 பத்துக்கள்) ரூ.	3	0	
,, (3, 4, 5 ,,) ,,	3	8	0
,, (6, 7, 8 ,,) ,,	3	8	0

3-வது ஆயிரம் (இயற்பா)

பெரிய திருமொழி (9, 10, 11 பத்துக்கள்) அச்சில்.			
முதல் வால்யூம் (1,2,3,4 திருவந்தாதிகள் ரூ.	4	8	0
2-வது (திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி) ,,	4	0	0
3-வது (திருவெழுக்கூற்றிருக்கை திருமடல்கள், இராமாநுச நூற்றந்தாதி) ,,	3	0	0
இராமாநுச நூற்றந்தாதி ,,	1	0	0
ஸ்ரீ ஆளவந்தார் ஸ்தோத்ரம் ,,	1	0	0
ஸ்ரீவசந பூஷண ஸாரம் ,,	1	4	0
கூரத்தாழ்வான் வைபவம் ,,	0	4	0
ஸ்ரீ முகுந்த மாலை ,,	0	6	0

திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகை ஆபீஸ்,
32, பந்தர் தெரு, மதராஸ்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாய்க்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0; காலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணா 12.

3. கம்பராமாயணம்-பாலகாண்டம்:—T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொணடே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப் பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத் திளவரசன்:—ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதற் கதை. விலை ரூ. 1-0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 12.

கலா நிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.

: : பிரபல ஜோதிஷர் : : மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர்,

ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)